★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 15 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 218 | Thursday 15, September, 2022 | 16பக்கங்கள் | 40/-







IMFஉடனான இணக்கப்பாட்டின் எதிரொலி:

## பாதுகாப்பு வைப்புக்களில் முதலீடு செய்யும் வெளிநாட்டவர்கள்

### வைப்புத்தொகை அதிகரித்துள்ளதாக இ.ம.வ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள கடனுதவிக்கான இணக்கப்பாட்டையடுத்து வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு வைப்புக்களில் முதலீடு செய்வது அதிகரித்து வருவதாக மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

கடந்த 07 ஆம் திகதி முதல் நிறைவடைந்துள்ள ஒரு வார காலத்தில் 930 மில்லியன் ரூபா பெறுமதியான தொகையை பாதுகாப்பு வைப்புக்களில் வெளிநாட்டவர்கள் முதலீடு செய்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதற்கு முன்னரான 06

பாராளுமன்றத்தில் செப்.23

## எலிசபெத் மகாராணிக்கு அனுதாபப் பிரேரணை



பிரிட்டனின் இரண்டாவது எலிசபெத் மகாராணியின் மறைவு தொடர்பாக அனுதாபப் பிரேரணையை பாராளுமன்றத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் பி.ப 12.30 மணி வரை மகாராணியின் மறைவு குறித்த அனுதாபப் பிரேரணையையும், பி.ப 1.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவுக்கான அனுதாபப் பிரேரணையையும் விவாதத்துக்கு எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

## நாட்டில் 18 இலட்சம் மாணவர்களுக்கு போஷாக்குள்ள பகலுணவு திட்டம்

### ஐ.நா உணவு, விவசாய அமைப்பு நிதி – மஹிந்த அமரவீர

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதி உதவியுடன் பாடசாலை மாணவர்கள் 18 இலட்சம் பேருக்கு போஷாக்கான பகல் உணவை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக பாடசாலை மாணவர்களின் போசாக்கு நிலைமை பாதிப்படைந்துள்ளதையடுத்து விவசாய அமைச்சு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அது தொடர்பில் தெரிவித்துள்ள விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, மேற்படி செயற்திட்டத்துக்காக ஐக்கிய நாடுகள் 06

# மருந்து தட்டுப்பாட்டை நீக்க புதிய நடைமுறைக்கு ஏற்பாடு

## மூன்று மாதங்களுக்கு தேவையானவற்றை ஒரேதடவையில் கொள்வனவு செய்ய நடவடிக்கை

### சம்பந்தப்பட்ட சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பணிப்புரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டுக்குத் தேவையான மருந்துகளைக் கொள்வனவு செய்யும்போது ஒரு மாதத்துக்கான மருந்தை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக ஒரே தடவையில் மூன்று மாத காலத்துக்கான மருந்து கொள்வனவுக்கான அழைப்பை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அவ்வாறு செய்வதன்மூலம் எதிர்காலத்தில் எதிர்நோக்க நேரிடும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டை தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற மருந்து கொள்வனவு தொடர்பான பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையில் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு மேலதிகமாக நாட்டில் முன்னணி தனியார் மருந்து விநியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்த பேச்சுவார்த்தையின் போது, இந்தியாவின் கடன் உதவி வேலைத்திட்டத்தை சுகாதார துறைக்காக உச்ச அளவில் உபயோகப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அமைச்சர் 06

## நேபாள தூதுவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



இலங்கையின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி மற்றும் பல்கலைக்கழக கல்வி வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில் நேபாளத்துக்கும் இலங்கைக்குமிடையில் இருதரப்பு உடன்படிக்கையை எட்டுவதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் நேற்று (14) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் 06



அரச ஊழியர்களின்
### ஓய்வுகால வயதெல்லை: சுற்றறிக்கை நேற்று வெளியானது

03

இலங்கை உள்ளிட்ட குறைந்த வருமான நாடுகளில்

## கடன் சுமை அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவுக்கே

### IMF முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டினா



இலங்கை உள்ளிட்ட குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் எதிர்நோக்கும் கடன் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவிற்கும் ஏனைய கடன் வழங்கும் நாடுகளுக்கும் உள்ளது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

வளர்ந்து வரும் சந்தையில் 25 வீதமான நாடுகளும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 60 வீதமான நாடுகளும் கடன் நெருக்கடியில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜிவா தெரித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கைக்கு பொதுக் கடனாளிகள் 06



## பாடசாலை மாணவரிடையே ஒருவித வைரஸ் காய்ச்சல்

அவதானமாக இருக்க Dr.சமல்பெரேரா அறிவுறுத்து

03



சுமார் 130 மில்லியன் பெறுமதி கொண்ட

## 434 Kg கேரள கஞ்சாவுடன் 05 இந்தியர் உட்பட 10 பேர் கைது

03

அரச ஊழியர்களுக்கான 05 வருட விடுமுறை:

## ஆசிரியர்கள் மற்றும் சுகாதார துறையினருக்கு பொருந்தாது

### பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கை



அரச ஊழியர்களுக்கு ஐந்தாண்டு கொடுப்பனவு இல்லாத விடுமுறை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை, பாடசாலை ஆசிரியர்கள், சுகாதாரத் துறை ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப சேவை நிபுணர்கள் போன்ற பிரிவினருக்கு பொருந்தாது என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே தெரிவித்துள்ளார். 06

மக்களை தவறாக வழிநடத்தும் நோக்கில்

## தாமரை கோபுரத்துக்கு போலி அனுமதி சீட்டுக்கள்

### டுவிட்டர் பதிவில் – சீன தூதரகம் விளக்கம்




தாமரை கோபுரத்தை பார்வையிடுவதற்கான போலி அனுமதி சீட்டு மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படுவது தொடர்பில் சீன தூதரகம் விளக்கமொன்றை வழங்கியுள்ளது.

சீன தூதரகம் டுவிட்டர் பதிவொன்றில் இதனை தெரிவித்துள்ளது.

சமூக வலைத்தளங்கள் வாயிலாக விநியோகிக்கப்பட்டு வரும் குறித்த அனுமதி பத்திரம் போலியானது 06

## தற்காலிக சாரதி அனுமதி பத்திரங்கள் மேலும் ஆறு மாத காலத்திற்கு நீடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஆறு மாத காலத்துக்காக வழங்கப்பட்டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடி காலத்தை ஒரு வருடமாக நீடிப்பதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சாரதிகள், வேரஹெர அலுவலகத்துக்கோ அல்லது தாம் வசிக்கும் மாவட்டத்திலுள்ள மாவட்ட காரியாலயத்துக்கோ சென்று இந்த கால நீடிப்பை மேற்கொள்ள முடியுமென அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடமுள்ள சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை 06

## மு.கா ஸ்தாபக தலைவரின் நினைவேந்தல் நிகழ்வு நாளை

### அக்கரைப்பற்றில் மு.கா பிரமாண்ட ஏற்பாடு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் மறைந்து 22 ஆம் ஆண்டு நிறைவை யொட்டிய நினைவேந்தல் நிகழ்வு நாளை 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு அக்கரைப்பற்று அய்னாஹ் கடற்கரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது .

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், விசேட அதிதியாக 06

## எம்.பிமாரது வீடுகளை தாக்கி தீவைத்த சம்பவம்

### மேலும் ஐவர் பொலிஸாரால் கைது



பாராளுமன்ற உறுப்பினர்களான டி.பி. ஹேரத் மற்றும் சுமித் உடுகும்புர ஆகியோரின் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தி தீவைத்த ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு மே மாதம் 10 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது வாரியபொல மற்றும் கொகரெல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை 06

# தமிழகத்தில் முதல்முறையாக இலங்கை தமிழருக்கு வீடுகள்

### 17.17 கோடி இந்திய ரூபாய் மதிப்பில் 321 தனித்தனி வீடுகள்

### தமிழக முதல்வர். ஸ்டாலின் நேற்று அங்குரார்ப்பணம்



**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இலங்கை தமிழர்களுக்காக திண்டுக்கல் மாவட்டம் தோட்டனுத்தில் ரூ. 17.17 கோடி இந்திய ரூபா மதிப்பில் நிர்மாணிக்கப்பட்ட 321 தனித் தனி வீடுகள் கொண்ட குடியிருப்பை சென்னையிலிருந்து காணொளி மூலம் 06

நீண்டநேரமாக சார்ஜில் இருந்த

## செல்போன் வெடித்து 8 மாத குழந்தை பலி

### இந்தியாவின் உத்தரபிரதேசத்தில் சம்பவம்



செல்போன் வெடித்து சிதறியதில் 8 மாத பெண் குழந்தை உயிரிழந்த சோக சம்பவம் இந்தியாவின் உத்தரபிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இந்தியாவிலுள்ள உத்தரபிரதேச மாநிலம் பரேலியில் அதிக நேரம் சார்ஜ் ஏற்றப்பட்ட செல்போன் வெடித்து சிதறியதில் 8 மாத பெண் குழந்தை பரிதாபமாக பலியாகியுள்ளது. பரேலி மாவட்டம் பச்சுமி கிராமத்தைச் சேர்ந்த சுனில்குமார் காஷ்யப், 06

மகாராணிக்கு இறுதி அஞ்சலி:

## இலங்கை பெண்ணுக்கு முதலாவதாக சந்தர்ப்பம்



பிரிட்டன் எலிசபெத் மகாராணியின் பூதவுடல் இங்கிலாந்தின் லண்டன் நகருக்கு கொண்டு வருவதற்கு முன்னர், ஸ்கொட்லாந்திலுள்ள புனித கயில்ஸ் தேவாலயத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வேளையில் அதற்கு இறுதி மரியாதை செலுத்துவதற்கு இலங்கை வம்சாவளியான பெண் ஒருவருக்கு முதற் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

வனேஷா நந்தகுமாரன் என்ற பெண்ணுக்கே இச்சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. 56 வயதான அவர் 1980ஆம் ஆண்டு 06

## நாமலுக்கு எதிரான வழக்கு டிச. 08இல்

### விசாரணைக்கு எடுக்க நீதிமன்று உத்தரவு



பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் சிலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 2000 கோடி ரூபா முதலீடு செய்தமை தொடர்பிலான வழக்கின் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று (14) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கின் அடுத்த 06

# கிழக்கின் குரல்



## கலை, கலாசார விழுமியங்களை பாதுகாக்க கலைஞர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**





அம்பாறை மாவட்டத்தில் இயங்கும் கலை மன்றங்களின் உறுப்பினர்களை கடந்த செவ்வாய்க்கிழமை (13) கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்ஷன் சந்தித்து கலந்துரையாடினார். இதில், பொத்துவில், திருக்கோயில், ஆலையடிவேம்பு, இறக்காமம், அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகங்களில் செயற்படும் 17 கலைமன்றங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விஷேட அதிதியாக கலந்து கொண்ட புதிய பணிப்பாளர் சரண்யா சுதர்ஷன் தெரிவித்ததாவது,

கலை மன்றங்களே, கலாசார திணைக்களத்தின் ஆணிவேராக செயற்படுகின்றன. தொடர்ச்சியான செயற்பாடுகளால்தான், மாகாணத்தின் கலை கலாசார விழுமியங்கள் மற்றும் பாரம்பரிய நிகழ்வுகளை வளர்த்தெடுக்க முடியும்.

உறங்கு நிலையிலுள்ள கலைமன்றங்களை தட்டி எழுப்பி செயற்படச் செய்வதும், எதிர்கால எமது சந்ததியினர் கலாசார மரபுகளை கண்டறிந்து அவர்களும் இதன் பால் ஈர்க்கப்படுவதும், செயல் திறனுள்ள கலாசார சமுதாயத்தை உருவாக்கும்.

இதுவே கலைஞர்களின் நோக்கமாகவும் தேவையாகவும் இருக்க வேண்டும். வாராந்தம் ஏதாவது கலைநிகழ்ச்சிகளை நடாத்தி, கலைக்கு உயிரூட்ட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார், கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், கலை மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.



பொலிஸ் சேவையின் 156வது வருட நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிகழ்வுகள், இம்மாதம் (03) முதல் செப்டெம்பர் (10) வரை இடம்பெற்றன. இதனையொட்டி, பொலிஸ் நடமாடும் சேவை, இரத்ததான நிகழ்வு என்பவற்றை பொத்துவில் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்தது. பொத்துவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலயத்தில் (10) இடம்பெற்ற இரத்ததான முகாமில், பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இரத்ததானம் வழங்கினர். பொத்துவில் பொலிஸ் நிலைய சமூகப் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி எம்.சீ.எம். ஹலிமுடீன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

(படம்: பாலமுனை விஷேட நிருபர்)



பொத்துவில் “ரைஸ் ஸ்டார்” விளையாட்டுக்கழகமும் “டில்ஷாத் அஹமட் பவுண்டேசன்” அமைப்பினரும் ஒருங்கிணைந்து 'பொத்துவில் மொட்டுக்களை பாராட்டுவோம்' நிகழ்வை நடாத்தின. இதில், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்தோர், க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்துக்கு தெரிவானோர், பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். பொத்துவில் ஹிதாயாபுரம் தவிசாளர் பூங்காவில், இந்நிகழ்வு இடம்பெற்றது. சுகாதாரத்துறையில் பிரகாசித்த சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.எம். மாலியும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார். (படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## சர்வதேச போட்டியில் வெற்றியீட்டியோருக்கு கௌரவம், பாராட்டு

**(சாய்ந்தமருது விசேட நிருபர்)**

ஸ்கொட்லாந்து சங்க இலக்கிய ஆய்வு நடுவகம் நடாத்திய சர்வதேச பேச்சு போட்டியில்,வெற்றி பெற்று தாய் நாட்டுக்கு பெருமை சேர்ந்த சம்மாந்துறையை சேர்ந்த மாணவிகள், கௌரவிக்கப்பட்டனர்.

சம்மாந்துறை பிரதேச சபை இவர்களை பாராட்டியது. இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் (13) இடம்பெற்றது.

இப்போட்டியில் கனிஷ்ட நிலை பிரிவில் மூன்றாம் இடத்தை அல் அர்ஷத் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் ஜலீல் பாத்திமா மின்ஹா மற்றும் இடைநிலை பிரிவில் மூன்றாம் இடத்தை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் அலியார் றாசிதா பர்வின் ஆகிய இரு மாணவிகளும் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கு காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேசசபை தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில். சம்மாந்துறை பிரதேசசபை உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம். ஏ.கே.முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர்கள், அல் அர்ஷத் மகா வித்தியாலய அதிபர் எம்.அப்துல் றஹீம், அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பிரதி அதிபர் ஏ.ஆர்.எஸ். சுஜானா, ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பிரதேச சபை உறுப்பினர்களும் தனிப்பட்ட முறையில் இம்மாணவிகளுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில்களும் வழங்கினர்.

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கடிதம் ஐக்கிய அரபு இராச்சிய அமீரிடம் கையளிப்பு

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஐக்கிய அரபு இராச்சியத்தின் அமீருக்கு எழுதியனுப்பிய விஷேட கடிதம், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் மூலமாக ஐக்கிய அரபு இராச்சிய அமீரிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் விஷேட தூதுவராக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட், அந்தக் கடிதத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அமைச்சரும் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான மாட்சிமைமிகு அப்துல் பின் ஷெய்யத் அல் நஹ்யானிடம் கையளித்துள்ளார்.

இரு நாடுகளின் உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அபுதாபியில் இடம்பெற்ற சந்திப்பில் பல தரப்பு விடயங்கள் குறித்து அமைச்சர் நஸீர் அஹமட்டும், ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அமைச்சரும் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதார மேம்பாடுகளுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்பை பலப்படுத்துவது குறித்தும், தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்தும் விளக்கிய அமைச்சர் நஸீர் அஹமட்; அதற்கான தீர்வுகள் குறித்தும் எடுத்துரைத்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் உதவிகளை பெறுவது தொடர்பில் அக்கறை செலுத்துமாறும் வேண்டிக் கொண்டார்.

மேலும், பிராந்திய மற்றும் சர்வதேசத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்புக்களுடன் பல்துறைகளில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றியும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறான விடயங்களுக்கு ஒத்துழைப்பதில் இலங்கைக்குள்ள ஆர்வங்களையும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

இச்சந்திப்பில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் மஹாதேவி பீரிஸும் கலந்துகொண்டார்.

## பள்ளிவாசலை அண்டிய பிரதேசங்களில் சேரும் குப்பைகளால் சுகாதார சீர்கேடு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**



கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட கடற்கரை பள்ளிவாசலை அண்டிய பிரதேசத்தில், நாளுக்கு நாள் சேரும் குப்பைகள் அதிகரித்து வருவதால் கடற்கரை பள்ளிவாசலுக்கு வருவோரும், பாதசாரிகளும், பிரதேச குடியிருப்பாளர்களும் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவதால் பெரும் சுகாதார சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்கரை வீதியினால் இரவில் பயணிக்கும் சிலர் வீட்டு கழிவுகளையும் மிருகக் கழிவுகளையும் கடற்கரை வீதியின் இரு மருங்கிலும் கடற்கரை ஓரத்திலும் வீசிவிட்டு செல்கின்றனர்.

இந்த குப்பைகளை பகல் வேளையில் கட்டாக்காலி மாடுகள், நாய்கள் மற்றும் காகங்கள் கிளறி பல இடங்களுக்கும் எடுத்துச்செல்வதால் பிரதேசமெங்கும் துர்நாற்றம் வீசுகிறது.

## கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

நாட்டின் பல பாகங்களிலும் ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபடும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர் மற்றும் மக்கள் திட்டமிட்ட வகையில் அச்சுறுத்தப்படுவதும், தாக்கப்படுவதும் சரளமாக இடம்பெறுவதைக் கண்டித்து வடக்கு, கிழக்கில் நேற்று (14) ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. அண்மைக்காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இவை, அதிகம் இடம்பெற்று வருவதை செய்திகளில் காண முடிகிறது.

இதுமட்டுமன்றி, சிவில் அமைப்புக்களின் அலுவலகங்கள் உடைக்கப்பட்டு முக்கியமான ஆவணங்கள் எடுத்துச் செல்லப்படுகின்ற நிலைமைகளும் தொடர்கின்றன.



நிந்தவூர் அல் - அஷ்றக் ஜுனியர் பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று (13) கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் ஒழுக்காற்றுக்குழுத் தலைவர் ஏ.எல்.ஏ.றபீக் பிர்தௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்லூரி முதல்வர் எம்.ஹபீபுல்லாஹ் மேர்சா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவத் தலைவர் எம்.ஜே.ஆத்தீஸ் அஹமட், மாணவத் தலைவி எம்.ஏ.அப்றா ஹானி ஆகியோருக்கு சின்னங்களை அணிவித்தார். இந்நிகழ்வில் 23 மாணவத் தலைவர்கள் சின்னங்கள் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களுடன் அதிபர், பொறுப்பாசிரியர்களும் காணப்படுகின்றனர்.

(படங்கள்: நிந்தவூர் தினகரன் விசேட நிருபர்)

## காத்தான்குடி ஸித்தீக்கிய்யா மகளிர் அரபுக்கல்லூரியின் பட்டமளிப்பு விழா

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**



காத்தான்குடி ஜாமிஅதுஸ் ஸித்தீக்கிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் 23 வது பட்டமளிப்பு விழா, கல்லூரியின் தலைவர் பொறியிலாளர் ஏ.எம்.எம். தௌபீக் தலைமையில் கல்லூரி வழாகத்தில் இடம்பெற்றது.

இரண்டு நாள் நிகழ்வுகளாக இடம்பெற்ற இப்பட்டமளிப்பு விழாவில் 140 மௌலவியாக்களும், 2 ஹாபிழாக்களும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். முதல்நாள் நிகழ்வின்போது சாய்ந்தமருது குல்லியதுத்தைபா மகளிர் அரபுக் கல்லூரின் அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம் பாவா மதனி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இதன்போது 2018ம் ஆண்டு வெளியான 34 மௌலவியாக்கள், 2019ம் ஆண்டு வெளியான 41 மௌலவியாக்கள் உட்பட ஒரு ஹாபிழாவும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். ரிஸ்வி மஜீதி பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இரண்டாம் நாள் நிகழ்வின்போது 2020ம் ஆண்டு வெளியான 34 மௌலவியாக்கள், 2021ம் ஆண்டு வெளியான 14 மௌலவியாக்கள், க.பொ.த. உயர்தரக் கற்கையுடன் 2019,2022, 2021 களில் வெளியான 16 மௌலவியாக்களுடன் ஒரு ஹாபிழாவும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

46 வருடகால வரலாற்று வளர்ச்சியைக் கொண்ட இப்பெண்கள் அரபுக் கல்லூரி, 1976ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1983 தொடக்கம் 2021 வரை 821 மௌலவிய்யாக்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளதுடன் 1999 தொடக்கம் 2021 வரை 44 ஹாபிழாக்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்.

மேலும் இக்கல்லூரியில் பட்டம் பெற்று வெளியாகி உள்ள மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்று பல்துறை சார்ந்த பட்டம் பெற்ற மௌலவியாக்களாக மற்றும் ஹாபிழாக்களாக அரச சேவையில் உள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இனாம் மௌலானா பாத்திமா ஷைரீனுக்கு பாராட்டு

**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

உயிரியல் பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் எட்டாம் இடம் பிடித்து மூன்று "ஏ" தர சித்திகளை பெற்று மருத்துவ துறைக்கு தகுதி பெற்றுள்ள மருதம் கலைக்கூடல் மன்ற உறுப்பினர், இனாம் மௌலானா பாத்திமா ஷைரின் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அமைப்பின் ஆலோசகரும், சாய்ந்தமருது கமு / கமு/ லீடர் எம்.எச்.எம். அஷ்ரஹ்ப் வித்தியாலய அதிபருமான எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் கல்முனையில், இந்நிகழ்வு (12) நடைபெற்றது.

சாய்ந்தமருது மருதம் கலைக்கூடல் மன்ற தலைவர் கலைஞர் அஸ்வான் எஸ்.மௌலானாவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதம பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹிர், அமைப்பின் தவிசாளர் ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி எம்.எம். இஸ்மாயில், சாய்ந்தமருது கமு/ கமு/ அல் ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நஸார், கல்முனை மாநகர சபை உறுப்பினர் கவிதாயினி சுஹைல் அஸீஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நூறுநாள் போராட்டத்தின் 45ஆவது நாள் நிகழ்வுகள்

**(பாசிக்குடா நிருபர்)**

தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் உரிமையை வலியுறுத்தி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும், நூறுநாள் போராட்டத்தின் 45 ஆவது நாள் நிகழ்வுகள் நேற்று காலை (14) வாகரை பிரதேசத்தின் வட்டவான் இறால் ஓடை கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றது. இப்போராட்டத்தில் சிவில் அமையத்தின் இணைப்பாளர் ஜெ.கோபிநாத் கலந்து கொண்டார். சிவில் சமூகம் சார்ந்த செயற்பாட்டாளர்கள், தொடர்ச்சியாக பல்வேறு வகையிலும் நசுக்கப்படும் நிலை தொடர்ந்தால், நாட்டின் ஜனநாயகம் கேள்விக்குறியாகலாம். எனவே சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் இதைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியம்.

சிவில் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசாங்கம் உத்தரவதம் வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோரால் காணிகள் அபகரிக்கப்படும் விடயங்கள்,வீடில்லா பிரச்சினை, வீதி புனருத்தாரணம்,மீன்பிடித் தொழிலில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனப் பல்வேறுபட்ட விடயங்களை முன்வைத்து கௌரவமான அரசியல் உரிமையை வழங்குமாறு அரசைக்கோரினர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 15 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்



**தொழுகை நேரம்**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 04.45 |
| லுஹர் | - | 12.07 |
| அஸர் | - | 03.14 |
| மஃரிப் | - | 06.11 |
| இஷா | - | 07.21 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 30

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | - | செலவு |
| ரிஷபம் | - | பாராட்டு |
| மிதுனம் | - | தனம் |
| கடகம் | - | போட்டி |
| சிம்மம் | - | கோபம் |
| கன்னி | - | முயற்சி |
| துலாம் | - | நன்மை |
| விருச்சிகம் | - | நிறைவு |
| தனுசு | - | வெற்றி |
| மகரம் | - | பொறுமை |
| கும்பம் | - | மறதி |
| மீனம் | - | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# கடல்வழியாக வெளிநாடு செல்ல முயற்சித்த 08 பேர்

## பேசாலையில் கடற்படையினரால் கைது

மன்னார், பேசாலை குடியிருப்பு கடற்கரையில் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக வெளி நாட்டுக்கு செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 08 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் வழியாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக கடற்படையினர் நாட்டின் கடல் மற்றும் கடற்கரையை உள்ளடக்கிய வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே இவர்க நேற்று முன்தினம் (13) இரவு கைது செய்யப்பட்டனர்.

அதன்படி, மன்னார் பேசாலை குடியிருப்பு கடற்கரையில் 13 ஆம் திகதி இரவு இலங்கை கடற்படையின் வடமத்திய கடற்படையின் கஜபா கப்பலினால் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட ரோந்து நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமாக கடற்கரையில் தங்கியிருந்த குழுவொன்றை அவதானித்த பின்னர் சோதனைக்குட்படுத்தினர்.

அங்கு, 18 வயதுக்கு மேற்பட்ட மூன்று (03) ஆண்கள், இரண்டு (02) பெண்கள் மற்றும் 18 வயதுக் குட்பட்ட மூன்று பேர் (03) உட்பட எட்டு பேர் கைது செய்யப்படடனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மொறவெவ, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் பெதுருதுடுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். 06

# அரச ஊழியர்களின் ஓய்வுகால வயதெல்லை

## சுற்றறிக்கை நேற்று வெளியானது



அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 60ஆக வரையறுக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சுற்றறிக்கை நேற்று (14) வெளியிடப்பட்டது.

அதற்கமைவாக, அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை 60 ஆக மட்டுப்படுத்தப்படுமென அமைச்சின் செயலாளர் மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பல அத்தியாவசிய சேவைகளுக்கு இந்த அறிவிப்பு செல்லுபடியாகாது எனவும் அவர் கூறியுள்ளார்.

# பாடசாலை மாணவரிடையே ஒருவித வைரஸ் காய்ச்சல்

## அவதானமாக இருக்க Dr.கமல்பெரேரா அறிவுறுத்து



கொவிட் நோய் தவிர, இந்த நாட்களில் பாடசாலை மாணவர்களிடையே வைரஸ் காய்ச்சலொன்று பரவுவதாக அரச மருத்துவ அலுவலர்கள் மன்றத்தின் செயலாளர் வைத்தியர் கமல் ஏ. பெரேரா தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சுகாதார பழக்கங்களை தொடர்ந்து பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இப்போது பலர் கொவிட் தொற்று குறித்து மறந்துவிட்டனர்.

இருப்பினும், நாள் ஒன்றுக்கு சுமார் நூறு கொவிட் நோயாளிகள் பதிவாகி வருகின்றனர். மேலும் நாளொன்றுக்கு 5 முதல் 6 கொவிட் இறப்புகள் பதிவாகின்றன. பொது மக்கள் இதில் அதிக கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தற்போது பாடசாலை மாணவர்களிடையே வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என பெற்றோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# திறைசேரிக்கு சுமை வழங்காமல் நிறுவனங்களை நடத்துவதே நோக்கம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுற்றறிக்கைகள் வெளியிடப்படுவது அதிகாரிகள் வேலை செய்வதற்கேயன்றி வேலை செய்யாமலிருப்பதற்காக அல்ல என தெரிவித்துள்ள அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, திறைசேரிக்கு சுமைகளை வழங்காமல் நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்வதில் கவனம் செலுத்தவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையொன்றின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இந்த பேச்சுவார்த்தையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்களான அருந்திக்க பெர்னாண்டோ, தேனுக விதானகமகே, அமைச்சின் செயலாளர் உட்பட அமைச்சின் கீழ் இயங்கும் 21 நிறுவனங்களின் தலைவர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்களுக்கு நிறுவனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் பெரும்பாலான இடங்களில் செயலாளர் உட்பட அதிகாரிகள் அமைச்சர்களுக்கு கடமைப்பட்டு பணிபுரிவதால் அரசாங்கம் வீழ்ச்சியடையவே செய்யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சில நிறுவனங்களின் அதிகாரிகள் சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே வேலைசெய்கின்றனர். அவ்வாறு அதனை மட்டும் வைத்து வேலை செய்வதை பழக்கமாகக் கொள்ள வேண்டாம். வேலைகள் நடக்க வேண்டும் என்பதே எமது தேவை.

நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. அந்த வகையில் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சரான நானும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தை மட்டுமே பெற்றுக்கொள்கின்றோம்.

புதிய வாகனங்களின்றி முன்பிருந்த வாகனங்களையே பயன்படுத்துகின்றோம். ஊழியர்கள் குறைக்கப்பட்டுள்ளனர். அதனால் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பாராளுமன்றத்தை பார்வையிட பொதுமக்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்வு

நிலவிய கொவிட்19 சூழல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பில் படைக்கல சேவிதரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் (14) அனுமதிக்கப்பட்டது.

இதற்கமைய முதற்கட்டமாக பாராளுமன்ற அமர்வு தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பாராளுமன்றத்தைப் பார்வையிட விரும்பும் தரப்பினருக்கு அனுமதியை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைய, செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பாடசாலை மாணவர்கள் பாராளுமன்றக் கட்டடத்தொகுதிக்கு வருகைதர அமர்வு அல்லாத நாட்களில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 3.00 மணிவரை (விடுமுறை நாட்கள் தவிர்ந்த) அனுமதிக்கப்படுவார்களென பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்தார்.

கடிதம், தொலைநகல் (0112777473/ 0112777335) 06

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஆஸி. முதலீட்டாளர்கள் ஆர்வம்

## ஜனாதிபதியுடன் முதற்கட்ட பேச்சு நேற்று ஆரம்பம்

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்ய முன்வந்துள்ள அவுஸ்திரேலிய முதலீட்டாளர்களுடனான ஆரம்ப கலந்துரையாடலொன்று நேற்று (14) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதலீடு செய்வது தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆராயும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. கலந்துரையாடலில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன்ஸ் உள்ளிட்ட முதலீட்டாளர்கள் குழுவொன்று கலந்துகொண்டது.

தற்போதைய மின்சார நெருக்கடிக்குத் தீர்வாகவும், தடையின்றி மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிக்க இலங்கை அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் G.C.E (A/L)

# மாணவர்களுக்கு தொடர் கல்விக் கருத்தரங்குகள்

## கல்வி அமைச்சு ஏற்பாடு

இவ்வாண்டு க.பொ.த (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் நோக்குடன் மாணவர்களுக்கான தொடர் கல்விக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

விஞ்ஞானம், வர்த்தகம், தொழிநுட்பம், கலை ஆகிய சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய இக் கருத்தரங்குகள் நாடு முழுவதும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வளவாளர்களின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது.

அதேநேரம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களை கொண்டு, க.பொ.த (உ.த)கற்பிக்கும் ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டுத் திட்டமும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக அமைப்பதன் மூலம், மாணவ, மாணவியருக்கு 06

சுமார் 130 மில்லியன் பெறுமதி கொண்ட

# 434 Kg கேரள கஞ்சாவுடன் 05 இந்தியர் உட்பட 10 பேர் கைது



வடமேற்கு கடற்பகுதியில் கடற்படை அதிரடி

வடமேற்கு கடற்பகுதியில் இலங்கை கடற்படை மற்றும் இலங்கை கரையோர பாதுகாப்பு படையினரும் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 434 கிலோ கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கேரள கஞ்சா பொதிகளை ஏற்றி வந்துகொண்டிருந்த இந்திய இழுவைப்படகுடன் 05 இந்தியபிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த கஞ்சா கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இலங்கை படகுடன் 05 இலங்கையரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு படையினரும் கடல் மார்க்கமாக ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்துடன் தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கரையோரப் 06

# உத்தேச தேசிய சபைக்கான பிரேரணை பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் இணைப்பு

## 20ம் திகதி விவாதம் நடத்தவும் இணக்கம்



தேசிய சபையை அமைப்பதற்கான தீர்மானத்தின் மீதான விவாதத்தை செப்டம்பர் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (புதன்கிழமை) காலை கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போதே, தேசிய சபையை அமைப்பது குறித்து செப்டம்பர் 20ஆம் திகதி விவாதம் நடத்த கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளதாக பாராளுமன்றத்தின் தகவல் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. பாராளுமன்றத்தில் புதிதாக நிறுவப்படவுள்ள உத்தேச தேசிய சபைக்கான பிரேரணை எதிர்வரும் 20ஆம் திகதிக்கான ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக சபாநாயகர் பதவி வகிப்பார். மற்றைய உறுப்பினர்களாக பிரதமர், அவைத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் ஆகியோர் உள்ளனர்.

அத்துடன், அரசியல் கட்சிகளின் தலைவர்களின் தீர்மானத்தின்படி, நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்து ஒன்பதாவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் 35 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகையாகாமல் இந்த தேசிய சபையில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி

# சீனத் தூதரக அதிகாரிகள் ADB பிரதிநிதிகளுடன் பேச்சு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை மற்றும் புத்தெழுச்சி திட்டம் தொடர்பில் சீனா, ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள சீன தூதரகம் அது தொடர்பில் தெரிவிக்கையில், இலங்கைக்காக சீனத் தூதுவர் விசேங் ஹொங் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் நாயகம் கெனிவ் யொகோயாமா ஆகியோருக்கிடையில் அது தொடர்பான பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் இலங்கையிலுள்ள நிறைவேற்று பணிப்பாளர் செங் செங்கும் இணைந்துகொண்டுள்ளதாக கொழும்பிலுள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

# தாமரைக் கோபுர செயற்பாடு இன்று முதல் ஆரம்பமாகிறது

## முதலீடுகளை மேற்கொள்ள 22 முதலீட்டாளர்கள் இணக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தெற்காசியாவின் மிக உயரமானதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாமரைக் கோபுரம் இன்று முதல் செயற்படவுள்ளது.

தேசிய சர்வதேச முதலீட்டாளர்கள் இதில் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதுடன் 22 முதலீட்டாளர்கள் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தாமரைக் கோபுரம் தனியார் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவ் வருடம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 06




கொழும்பு "டைம்ஸ்" பிரதம ஆசிரியர் எம்.சி.ரசூல்டீன் ஏற்பாட்டில் கொழும்பு மென்டரீனா ஹோட்டலில் புதன்கிழமை மாலை ஓமான் நாட்டில் இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்ட ஜபருல்லாஹ் கானை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் பொன்னாடை போர்த்துவதை காணலாம். ஊடகவியலாளர் ரசூல்தீனும் உடன் காணப்படுகிறார். (படம்: ருசைக் பாரூக்)

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 30ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்

*அமர்க்களத்தில் சாவுக்கும் அஞ்சாமல் போரிடுவது பலருக்கும் எளிதான செயல், அறிவுடையோர் நிறைந்த அவைக்களத்தில் அஞ்சாமல் பேசக்கூடியவர் சிலரேயாவர்.*

# உணவுப் பாதுகாப்புக்கான புரட்சிகர வேலைத்திட்டம்

இலங்கை முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பில் அதிக கரினை செலுத்தப்படும் நிலைமை உருவாகியுள்ளது. இது பல மட்டங்களிலும் அவதானத்தைப் பெற்றுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், போஷாக்கு குறைபாட்டை தவிர்த்துக் கொள்வதும் ஒவ்வொரு நாட்டுக்கும் இன்றியமையாத விடயமாகும். இவ்வாறான நிலையில் இவ்விடயம் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையங்களை வலுவூட்டும் பல்துறை சார் கூட்டுப் பொறிமுறையொன்றை நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார்.

எந்தவொரு நெருக்கடியான சூழலிலும் மக்கள் ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்வதற்கான சமூக, பொருளாதார சூழலை உருவாக்கவே இத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது உணவு இன்மையினால் எந்தவொரு குடிமகனும் பட்டினியால் வாடவும், போஷாக்கு குறைபாட்டினால் எந்தவொரு குழந்தையும் பாதிக்கப்படவும் கூடாது. அதுதான் இத்திட்டத்தின் அடித்தளமாக உள்ளது.

கிராம அலுவலர் பிரிவுகள் மட்டத்தில் பொருளாதார ரீதியிலான மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, வறுமையை ஒழித்து, போஷாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்து, பிரதேசத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது.

இப்பொறிமுறையின் கீழ் ஏழு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு சபை ஜனாதிபதி தலைமையில் செயற்படுகிறது. அதேநேரம் ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், மாகாண ஆளுநர்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்கள் ஆகியோர் தலைமையில் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டக் குழுக்களும் அமைக்கப்படவிருக்கின்றன.

அத்தோடு நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், கமநல சேவை உத்தியோகத்தர், குடும்பநலமாது, அருகிலுள்ள பாடசாலை அதிபர், பிரதேசத்தின் உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கி இவ்வகைக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன.

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதையும், போஷாக்கின்மையை நிவர்த்தி செய்வதையும் இலக்காகக் கொண்டு பரந்த அடிப்படையில் கவனம் செலுத்தி இப்பொறிமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஊடாக நாட்டுக்கு வருடமொன்றுக்குத் தேவைப்படும் மொத்த அரிசியில் 3.6 மில்லியன் மெற்றிக் தொன்களையும், வெங்காயத்தில் 50 வீதத்தையும் உருளைக்கிழங்கில் 35 வீதத்தையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு இருக்கின்றது.

மேலும் வருடா வருடம் நாட்டுக்குத் தேவைப்படும் மொத்த சோயா அவரையில் 20 வீதத்தையும், செத்தல் மிளகாயில் 20 வீதத்தையும் 2025க்குள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு 2025 ஆகும் போது குரக்கன், எள், பயறு, கௌபி, நிலக்கடலை, சோளம் ஆகியவற்றில் தன்னிறைவு அடையவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தி மேம்பாட்டுக்காக வருடமொன்றுக்கு 06 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் சோளம் தேவைப்படுகிறது. அவற்றில் 80 வீதத்தை இவ்வருட முடிவுக்குள் உற்பத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, பெரும்போகத்தில் நெல் மற்றும் சோளம் உற்பத்திக்குத் தேவையான 02 இலட்சத்து 30 ஆயிரம் மெற்றிக் தொன் இரசாயனப் பசளையையும், ஒரு இலட்சம் மெற்றிக் தொன் ரி.எஸ்.பி மற்றும் ஒரு இலட்சத்து 82 ஆயிரம் மெற்றிக் தொன் எம்.ஒ.பி ஆகிய பசளைகளை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய கடன் வசதிகளின் ஊடாக இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய உணவுப் பயிர்களுக்கு தேவையான பசளையைத் தனியார் துறையினர் ஊடாக இறக்குமதி செய்யவும் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பெரும்போகத்தில் சிறந்த அறுவடையை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான இரசாயனப் பசளை, கிருமிநாசினி, பயிர்விதை ஆகியவற்றை விவசாயிகளுக்கு உரிய நேரகாலத்தில் பெற்றுக் கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆகவே நாட்டில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கின்மையைத் தவிர்ப்பதில் பாரிய புரட்சியை இவ்வேலைத்திட்டங்கள் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இதன் ஊடாக மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களையும் அழுத்தங்களையும் பெரிதும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மக்களின் எதிர்பார்ப்பம் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# இனங்களுக்கிடையில் சகவாழ்வை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம்

## பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு ஏற்பாடு

பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் (Affected Women Forum AWF) பிரதேச மட்ட இனங்களுக்கிடையிலான சகவாழ்வை கட்டியெழுப்பும் நிகழ்வு அண்மையில் இறக்காமத்தில் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பானது நாட்டில் இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்பும் நோக்கில் கிராம மட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் மூவினங்கள் வாழும் பிரதேசங்களை தெரிவு செய்து அங்கு வாழும் மூவின மக்களுக்கிடையில் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கிராம மட்டத்தில் சவாழ்வை உறுதிப்படுத்துவற்கான அனைத்து இன மக்களையும் உள்ளடக்கிய சகவாழ்வு அமர்வுகள், கலாசார நிகழ்வுகள், விஷேட தின கொண்டாட்டங்கள், சிரமதானங்கள், சமயங்களுடனான கருத்துப்பரிமாறல்கள் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.





அந்த வகையில் இறக்காமம் பிரதேசத்திற்கான பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் உறுப்பினர்களுடனான சகவாழ்வு அமர்வு உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

பெண்கள் வெளிக்கள உத்தியோகத்தர் ஆர்.எஸ். றிஸ்மியா ஜஹான், அமைப்பின் பிரதேச ஒருங்கிணைப்பாளர் டீ. நஜீமியா ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் வளவாளர்களாக கலந்து சிறப்பித்தனர். மேலும் இந்நிகழ்வில் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துசிறப்பித்தமை விசேட அம்சமாகும்.

**றிசாத் ஏ காதர்...**
*(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)*

# முடக்க காலம் நிலவிய போதிலும் சிறப்பான பரீட்சைப் பெறுபேறுகள்

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கிழக்கு மாகாணம் முதலிடம் பெற்றுள்ளதுடன், கிழக்கு மாகாணத்தில் மூதூர் கல்வி வலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. கிழக்கு மாகாணம் உயர்தர பரீட்சையின் அடிப்படையில் தரப்படுத்தலில் முதலிடத்தை பெற்றதையடுத்து கிழக்கு மாகாண ஆளுநரினால் கிழக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளரான ஸீனத்துல் முனவ்வரா முகம்மது நளீமும் விசேடமாக பாராட்டி கௌரவிக்கப்பட்டார். கல்வி நிருவாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்த ஸீனத்துல் முனவ்வரா முகம்மது நளீம் மூதூர் வலயத்தின் கல்வி அடைவு தொடர்பிலும் கல்வித்துறை சார்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தினகரனுக்கு கருத்துத் தெரிவித்தார்.

கேள்வி: உயர்தர பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மூதூர் கல்வி வலயம் முதலிடத்தை பெற்றிருக்கிறது.



## மாணவர்களின் முன்னேற்றத்துக்கான காரணங்களை விபரிக்கிறார் மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஸீனத்துல் முனவ்வரா முகம்மது நளீம்

மூதூர் வலய கல்விப் பணிப்பாளராக இந்த அடைவை எப்படிப் பார்க்கிறீர்கள்?

பதில்: நான் மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளராக 2020.08.17 தொடக்கம் கடமையாற்றி வருகிறேன். இதிலிருந்து தொடர்ந்தும் க.பொ.த.உயர்தரப் பரீட்சை பெறுபேறு முன்னேற்றமடைந்து வருவதை பெறுபேற்று உயர்ச்சி வீதம் காட்டுகிறது.

கேள்வி: இவ்வாறான ஓர் அடைவு மட்டத்தை பெறுவதற்கு உண்மையான பங்குதாரர்கள் யார் என நினைக்கிறீர்கள்?

பதில்: இவ்வாறான இந்த அடைவை எமது மூதூர் வலயம் பெறுவதற்கு மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர், வலயக் கல்வி அதிகாரிகள், ஏனைய நலன் விரும்பிகள் என இன்னும் பலரும் பங்குதாரர்களாக உள்ளனர்.

கேள்வி: மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மூதூர் வலயத்தில் ஏதாவது விசேட செயற்றிடங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா?

பதில்: மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மூதூர் கல்வி வலயத்தில் பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும், விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளை, தொடர்ந்தும் இன்னும் பல வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கேள்வி: சவாலான காலகட்டத்தில் குறிப்பாக கொரோனா,பொருளாதார நெருக்கடி நிலைமைகளின் போது பாடசாலை நடைபெறாத காலங்களில் மாணவர்களின் சுயகற்றல் விருத்தியடைந்தமையும் இந்த அடைவுக்கு காரணமாக அமைந்ததா?

பதில்: சவாலான காலகட்டத்தில் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளின்போது பாடசாலை நடைபெறாத காலங்களில் சுயகற்றல் விருத்திக்கு வாய்ப்பாக அமைந்திருந்தது. அத்துடன், நிகழ்நிலை கற்றல் மூலமாகவும் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுத்ததன் மூலமாகவும் கற்றல் நடவடிக்கைகளை விருத்தியடையச் செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

கேள்வி: பரீட்சை மைய கல்வியினால் பண்பாட்டு வீழ்ச்சியை தவிர்க்க முடியாது என்ற குற்றச்சாட்டை எப்படி எடுத்துக் கொள்வீர்கள்?

பதில்: கல்விக் கொள்கைகள், காலத்துக்குக் காலம் வெளிவருகின்ற சுற்றறிக்கைகள் என்பன மாணவர்களின் நலன் கருதியே நடைமுறைப்படுத்தப்படுவதனால் பரீட்சை மையக் கல்வியினால் பண்பாட்டு வீழ்ச்சி ஏற்படுகின்றது என்பதை கருத்திற் கொள்ளலாகாது.

கேள்வி: எதிர்வரும் வருடங்களில் பாடசாலையில் அமுல்படுத்தப்படவுள்ள 21ஆம் நூற்றாண்டு கல்வி சீர்திருத்தத்திற்கு மூதூர் வலய கல்வி அதிகாரிகளும் ஆசிரியர்களும் மாணவர்களும் தயாராகி விட்டார்களா?

பதில்: அமுலில் உள்ள மற்றும் அமுல்படுத்தப்படவுள்ள கல்விச் சீர்திருத்தங்களுக்கு மூதூர் கல்விச் சமூகம் தயாராக உள்ளது.

**இர்ஷாத் இமாமுதீன்...**
*(கிண்ணியா தினகரன் நிருபர்)*

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் அடிக்கடி உருவெடுக்கும் குளறுபடிகள்!

இலங்கையின் மின்சாரத் தேவையை அனல்மின்வலு கொண்டு பூர்த்தி செய்வதை குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள அனல்மின் நிலையத் திட்டங்களில் பாரிய முதல் திட்டமே நுரைச்சோலை அனல்மின் நிலையத் திட்டமாகும்.

21ஆம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தம் வரை இலங்கையின் தேசிய மின்தேவையின் பெரும்பகுதியை நீர்மின் வலுவே நிறைவேற்றி வந்தது. வரட்சியான காலநிலை காரணமாக மின்வெட்டு ஏற்பட்டதுடன் அது தேசிய பொருளாதாரத்தையும் பெருமளவிற்கு பாதித்தது. நீர் மின்வலுவுக்கு பதிலாக மாற்று மின்வலுவொன்றின் தேவை நீண்டகாலங்களாக உணரப்பட்டு வந்தது.

அதன் பின்னர் நுரைச்சோலை அனல்மின் நிலைய நிர்மாணப் பணிகள் 2007 ஆம் ஆண்டு ஆரம்பமாகின. சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. சீனாவின் எக்ஸின் வங்கியின் 455 மில்லியன் அமெரிக்க இலகுகடனைக் கொண்டு நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதற்கட்டப் பணிகள் ஆரம்பமாகின.

இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகளின் முக்கிய பங்காளியாக சீனாவின் தேசிய இயந்திர ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கூட்டுத்தாபனம் அமைந்துள்ளது. இதன் கட்டுமானப் பணிகளில் இலங்கைப் பொறியியலாளர்கள் மற்றும் பணியாளர்களுடன், சீனாவைச் சேர்ந்த பணியாளர்களும் இணைந்தனர்.

நுரைச்சோலை அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டால் சுற்றுவட்டாரத்தில் உள்ள விவசாய நிலங்கள் பாதிப்படையும், அதிக வெப்பம் மற்றும் தூசுப்படலங்கள் வெளியேறி சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் என சூழலியலாளர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

ஆனால் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாதவாறே அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டிருப்பதாக இத்திட்டத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் கூறியிருந்தனர்.

சூழல் பாதிப்புகள் ஒருபுறமிருக்கையில், நுரைச்சோலை அனல்மின்நிலையமானது எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லையென்பதே நிபுணர்களின் முடிவாகும். அதாவது சீனாவின் இந்த நிர்மாணம் தோல்வி என்கின்றனர் அவர்கள்.

ஒரு மணித்தியாலயம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 114 தொன் நிலக்கரி தேவைப்படுகிறது. மூன்று மாதங்கள் மின் உற்பத்தி செய்வதாயின் 7 மில்லியன் தொன் நிலக்கரி தேவைப்படும். சூழல் பாதிப்பு தொடர்பான புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. அதே சமயம் நுரைச்சோலை மின்நிலையத்தில் இடையிடையே ஏற்படுகின்ற கோளாறுதான் பெரும் பிரச்சினையாகியுள்ளது.

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தை பாராமரிப்பதற்காக 12 ஆண்டுகளாக சீன நிறுவனத்திற்கு செலுத்திய பணத்தில் நாட்டுக்கு தேவையான மற்றுமொரு அனல்மின் நிலையத்தை நிர்மாணித்திருக்கலாம் என்று அரசுக்கு எதிரான அரசியல் தரப்பினர் கூறி வருகின்றனர்.

அளவு கடந்த செல்வத்தை உலக நாடுகளுக்கு கடனாக கொடுப்பது சீனாவின் வழக்கம். இலங்கையில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வது, அணைகள், பாலங்கள் நிர்மாணிப்பது, வீதிகளை அமைப்பது, விமான நிலையம் கட்டுவது, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை மேம்படுத்துவது என்றெல்லாம் பல்வேறு பணிகளுக்கு சீனா நிதி உதவி அளித்தது.




## மின்நெருக்கடி நிலவும் காலகட்டத்தில் மக்களுக்கு மேலும் அசௌகரியம்!

அதிகளவு தொகை கடனை சீனாவிடமிருந்து வாங்கி இருக்கும் இலங்கை, தற்போது வட்டித் தொகையை செலுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றது. இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு சீனாவின் கடனுதவிகளும் ஒரு காரணம் என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

இந்தியாவின் தெற்குப் பக்கம் இலங்கையை உதவித் திட்டங்களால் வசப்படுத்திய சீனா, வட மேற்கு பக்கத்தில் பாகிஸ்தானில் 4.5 இலட்சம் கோடி ரூபாவுக்கு(இந்திய நாணயத்தில்) முதலீடு செய்து, தன்வசப்படுத்தி வருகிறது. இதுவும் பாகிஸ்தானுக்கு கடன் தான். அதனை மீளச்செலுத்துவதென்பது இலகுவான காரியமல்ல.

மேலும் பாலங்கள், அணைகள், துறைமுகம், ரயில் பாதை, தொழிற்சாலை என அனைத்திற்கும், சீனாவின் மிகப்பெரிய வர்த்தக வங்கி வாயிலாக பாகிஸ்தானுக்கு கடன் கொடுத்திருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை நுரைச்சோலை மின்நிலையம் பெருமளவு நிதியில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், அதனால் எதிர்பார்த்த பலனை ஈட்ட முடியவில்லை என்பதுதான் உண்மை. அடிக்கடி ஏற்படுகின்ற கோளாறுகளால் மின்தடை ஏற்படுவது பெரும் பிரச்சினை ஆகும்.

சமீபத்தில் கூட நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் முதலாவது மின் உற்பத்தி இயந்திரம் திடீரெனப் பழுதடைந்தது. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின் உற்பத்தி செய்யும் இயந்திரமும் பராமரிப்பு பணிகள் காரணமாக செயலிழந்திருந்தது. இதன் காரணமாக நாட்டில் மின்சாரத்தை சீராக வழங்குவதில் சிக்கல் எதிர்நோக்கப்பட்டது.

நுரைச்சோலை அனல்மின்னுற்பத்தி நிலையத்தில் மின்சார உற்பத்தி அடிக்கடி பாதிக்கப்படுவதற்கான காரணங்கள் எவை? சீனாவின் கட்டுமானங்களில் ஏதாவது குறைபாடு உள்ளதா? அங்கு பொருத்தப்பட்டுள்ள தரமற்ற உபகரணங்களால் மின்னுற்பத்தி செயலிழக்கின்றதா?

இவையெல்லாம் மக்கள் மத்தியில் எழுகின்ற தவிர்க்க முடியாத சந்தேகங்கள் ஆகும்.

நுரைச்சோலை மின்சார நிலையம் அமைக்கப்பட்டதில் இருந்து அதன் செயற்பாடுகள் முழுமையான திருப்தி தருவதாக இருக்கவில்லை. மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தில் அடிக்கடி பழுது ஏற்படுவதும், மின்விநியோகம் தடைப்படுவதும் வழமையான சம்பவங்களாகி விட்டன. இப்பாதிப்புக்காக பலவிதமான காரணங்கள் கூறப்பட்டாலும், அங்குள்ள உபகரணங்கள் தரமாக இல்லையென்பதுதான் மறைக்க முடியாத காரணமாகும்.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாணத்தை சீனாதான் மேற்கொண்டது. இது தொடர்பாக சீனாவின் மீது மக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவது இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். சீனாவின் தரமற்ற கட்டுமானம் காரணமாகவே நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் அடிக்கடி பழுதடைவதாக மக்கள் மத்தியில் நிலவுகின்ற அபிப்பிராயத்தை புறந்தள்ளி விடவும் முடியாது.

கடந்த காலங்களில் 25 தடவைகளுக்கும் மேலாக நுரைச்சோலை அனல் மின்நிலையம் இதுவரை செயலிழந்து போனமை குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாகவே சீனாவின் நிர்மாணம் குறித்த சந்தேகம் மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாததாக உள்ளது.

உலகின் ஏனைய நாடுகள் நிலக்கரி மூலமான மின் உற்பத்தியை நிறுத்தி மாற்றுத் திட்டங்களுக்கு செல்லும் போது, இலங்கையில் இந்த நிலைமை நீடிப்பது சூழலியலாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையில், இவ்வாறு நுரைச்சோலை மின்நிலையத்தின் உபகரணங்கள் அடிக்கடி பழுதடைவதால் மின்சார விநியோகத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது.

ஆரம்பகாலம் தொட்டே சரியான தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றத் தவறியதே இது போன்ற பிரச்சினைகளுக்கு பிரதான காரணம் என்பதுதான் பொருத்தமான கருத்தாகும். சீனாவின் உபகரணங்கள் தரமானவையா என்பது பற்றிய சந்தேகமும் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

**எஸ்.சாரங்கன்...**

# வரதராஜப்பெருமாள் எழுதிய 'இலங்கைப் பொருளாதாரம்'

**பல்கலைக்கழகத்திலிருந்து பலர் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால் சிறையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு வந்த மாணவராகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அ.வரதராஜா பெருமாளை நான் சந்தித்தேன். அவரது வாழ்வு அரசியலாகவே இருந்தது. மீண்டும் வெலிக்கடை சிறைக்குள் நாங்கள் சந்திக்க நேர்ந்தது ஒரு சரித்திரம்.**



**நூலை ஆய்வு செய்கிறார் மு.நித்தியானந்தன்**



பொருளியலையும் சமூகவியலையும் முறையாகப் பயின்ற ஒரு கல்விப்புலத்தின் பின்னணியில் இலங்கைப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியை வரதராஜபெருமாள் இந்த நூலில் நுட்பமாக ஆராய்ந்திருக்கிறார். கோட்பாட்டுப் பின்னணியிலும் வாரி இறைத்திருக்கும் புள்ளிவிபர ஆதாரங்களுடனும் தன் வாதங்களை நிறுவுகிறார்.

வரதராஜப்பெருமாளின் இந்த நூலின் சிறப்பு அவர் ஒரு ஈடுபாட்டுடன் engagement உடன் நமது பொருளாதாரத்தை அணுகியிருப்பதுதான். பொருளியலாளர்கள் பல்கலைக்கழகத்திலும், குளிரூட்டப்பட்ட மத்திய வங்கியின் விசாலமான அறைகளிலும் பன்னாட்டு நிறுவனங்களின் உயர் அதிகாரமையங்களிலிருந்து மட்டும் உருவாவதில்லை. ஓரங்கட்டப்பட்டவர்களின், ஒடுக்கப்பட்டவர்களின், விளிம்பு நிலைக்கு வீசப்பட்டுவிட்ட ஜீவன்களின் நலனை முன்னிறுத்தி, சிவில் அமைப்புகளின் பேரால், ஜனநாயக விழுமியங்களைப் பேணி, மாற்று அரசியலைத் தேடி, அரசியல் கட்சிகளின் தளத்தில் நின்று, சமூகநீதி கோரி, மக்கள் விடுதலையை யாசிக்கும் மக்கள்சார் பொருளியலாளனின் மூர்ச்சனையை வரதராஜப்பெருமாளின் இந்த நூலில் கேட்க முடிகிறது.

தவறான அரசியல்வாதிகளால் இந்த சிங்காரத் தீவு சிதைந்துள்ளது. தேயிலை மலைகளில் மலையகப் பெண்கள் கிள்ளிய கொளுந்துகளால் தான் நூறாண்டுகளாக அவர்கள் சிந்திய வியர்வையாலும் இரத்தத்தாலும் பெறப்பட்ட அந்நியச் செலவாணியால் தான் பலர் ஒய்யாரவாழ்வு வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆனால், அந்த மக்கள்கூட்டம்தான் வாழ்நாள் முழுதும் அடிமைச் சிறைக்குள் வைக்கப்பட்டிருந்தது.

அ.வரதராஜப்பெருமாள் வெற்றுக்கோட்பாட்டாளராக அல்லாமல், நீண்ட அரசியல் பயணத்தின் வழியில் அவர் சேகரித்துக் கொண்ட நடைமுறை அனுபவங்களின் உரைகல்லில் சோதிக்கப்பட்ட ஆய்வாக இந்த நூல் அமைந்திருப்பது சிறப்பு.

எல்லா எதிர்ச் சூறாவளிகளுக்குள்ளும் நின்று, தளராமல், மக்கள் மத்தியில் நின்று குரல்தரும் ஜனநாயகவாதியாக வரதராஜப்பெருமாள் இன்று நமக்குத் தெரிகிறார். அவருடைய அரசியல் அனுவபங்கள் அவரைப்புடம் போட்டிருக்கின்றன. அவரின் ஆழ்ந்த பொருளியல் ஞானம் இந்த நூலைச் செதுக்கித் தந்திருக்கிறது. விளிம்பு நிலை மக்களின் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒர்மக்குரலாக வரதராஜப்பெருமாளின் குரல் இந்த நூலில் பக்கத்திற்குப் பக்கம் ஒலிக்கிறது.




# மாத்தறை மக்களால் எக்காலமும் மங்களவை மறக்கவே முடியாது!

**சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அழைப்பில் 1989 ஆம் ஆண்டு இலங்கை அரசியல் களத்தில் பிரவேசித்த மங்கள சமரவீர அன்றிலிருந்து மாத்தறை மக்களின் அன்பிற்கும் மரியாதைக்கும் ஆளாகினார். ஆயிரக்கணக்கான வேலையற்ற இளைஞர்களுக்கு அபிவிருத்தியினூடாக வேலைவாய்ப்புகளையும் பெற்றுத் தந்துள்ளார்.**

அதுதவிர மாத்தறை நகருக்கு புதிய விடியலை ஏற்படுத்தினார். கட்சி, நிற, சாதி, மத பேதமின்றி அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் சேவையாற்றிய தலைவர் அவராவார். தனது தந்தையான முன்னாள் அமைச்சர் மஹாநாம சமரவீரவின் பொதுப் பணியை மே லும் மேம்படுத்தி சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் ஆகிய அனைத்து இலங்கைப் பிரஜைகளையும் நல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் நல்லிணக்கத்துடன் சமஉரிமைகளை அனுபவிக்கச் செய்தவர் அவர். மஹாநாம சமரவீர உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு அமைச்சராக இருந்த போது, மாத்தறை பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கினார். முஸ்லிம் சமூகத்தின் நெருங்கிய நண்பராக செயற்பட்டார். எனது தந்தை ஆரிப் ஹனபீ அத்துடன் தற்போதைய மாநகர சபை உறுப்பினர் ஜஸ்மின் சாலியின் தந்தை டொக்டர் எ.சி.எம். சாலியுடன் நீண்ட காலமாக நெ ருங்கிய தொடர்பில் இருந்து மாத்தறை முஸ்லிம் மக்களுக்காக பணியாற்றினார். அவரது சேவையை நன்றியுடன் நினைவு கூர வேண்டும்.

அதேசமயம் அவரின் தாயான முன்னாள் மாநகர சபை உறுப்பினர் திருமதி கேமா சமரவீர மாத்தறை மாநகர சபையை என்னுடன் சேர்ந்து சமகாலத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி நகர்ப்புற மக்களுக்காக பணியாற்றினார். தனது எண்ணங்களை யும் பார்வையையும் அச்சமின்றி வெளிப்படுத்தி செ யல்படுத்தும் ஆளுமை கொண்ட மங்கள, நேர்மையான துணிச்சலான தலைவர். அவரது சிந்தனையை பாதுகாத்து நாட்டின் எதிர்காலத்திற்கு பங்களிப்பது நம் அனைவரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

**கீர்த்திஸ்ரீ முன்சீர் ஹனபீ...**
மாத்தறை



# திருமலையில் 'அன்பின் விலாசம்' கவிதை நூல் வெளியீட்டு விழா

**திருகோணமலை மாவட்டத்தின் பிரபல பாடசாலைகளில் ஒன்றான தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் தனபாலசிங்கம் இராஜேஷ்வரி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும், சிறந்த ஓவியருமான தனபாலசிங்கம் சஞ்சிவன் எழுதிய 'அன்பின் விலாசம்' என்ற நூல் அவரது வாழ்க்கை அனுபவங்கள், பலவிதமான ரசனைகள் மற்றும் உணர்வுகளின் ஊற்றாக வெளிப்பட்டுள்ளது.**

ஆசிரியர் தனது படைப்பில் தமிழ் இனத்தின் வீரத்தையும் அடையாளப்படுத்தியுள்ளார் என்பது சிறப்பம்சமாக அமைந்திருக்கின்றது. இவருடைய இந்த படைப்புக்களை வெளிக்கொண்டு வருவதற்கு உந்துசக்தியாக அமைந்தது அவருடைய நண்பர்கள் குழாம். இவர்கள் இலக்கியத்துறைக்கு அப்பால் டொக்டர்,பொருளியலாளர்என பல்துறை சார்ந்தவர்கள் என்பதும் விஷேடம்.

இக்கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கம்பபாரதி இ.ஜெயராஜ் அவர்களும், சிறப்பு விருந்தினராக கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் க.ச. குகதாசன், திருகோணமலை இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர்களான மா. இராசரெத்தினம், சி. தண்டாயுதபாணி, கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் திருமதி சந்திரவதனி தேவதாசன், திருகோணமலை இந்துக் கல்லூரியின் அதிபர் செ. பத்மசீலன் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் என பலர் கலந்துகொண்டார்கள். எழுத்தாளர் மற்றும் சமூக ஆய்வாளர் மு. மயூரன் நூல் நயவுரை வழங்கி தனது பேச்சுத்திறனால் நிகழ்வை சிறப்புமிக்கதாக்கினார்.

**பா.விபூஷிதன்...**
(திருகோணமலை)









# 'சிவில் சமூக அமைப்பின் பொறுப்புகள், கடமைகள்'

**மொரவெவ சிவில் சமூக அமைப்பினால் 'சிவில் சமூக அமைப்பின் பொறுப்புகளும் கடமைகளும்' பற்றிய செயலமர்வு அமைப்பின் தலைவர் அப்துல்சலாம் யாசீம் தலைமையில் நடைபெற்றது.**

மஹதிவுல்வெவ விஜயராஜ விகாரையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அறுபதுக்கு மேற்பட்ட சமூக சிந்தனையாளர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையத்தின் தலைவர் டொக்டர் ரவிச்சந்திரன் வளவாளராக கலந்து கொண்டதுடன், AHRC அமைப்பின் பிரதிநிதிகளும் இச்செயலமர்வில் கலந்து கொண்டனர்.

இந்த அமைப்பின் ஊடாக இனங்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்திக் கொள்வதுடன், இளைஞர், யுவதிகள் மத்தியில் சர்வமத போதனைகள் தொடர்பாக அறிவூட்டல்களை வழங்குவதும் நோக்கமாகும்.

மேலும் போதைப்பொருள் தடுப்பு செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி இளைஞர், யுவதிகள் மத்தியில் நல்லுறவை பேணும் நோக்கில் பிரதேச மட்டத்தில் செயல்படுவதும் மற்றொரு நோக்கமாகும் எனவும் சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

(ரொட்டவெவ குறூப் நிருபர்)





# சாய்ந்தமருது பிரதேச மாணவருக்கு சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில்

**சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர்தர வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் தோறும் வழங்கப்பட்டு வரும் சிப்தொர புலமைப் பரிசில் காரணமாக அதிகளவிலான மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.**



வறுமை காரணமாக உயர்கல்வியை இடையில் கைவிட்டு வேறு திசைகளுக்கு தம்மை மாற்றிக் கொள்ளும் மாணவர்களின் எதிர்காலத்தை இத்திட்டம் வளமாக்கிக் கொள்கின்றது. சாய்ந்தமருது உயர்தர மாணவர்களுக்கு சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமைமைல் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தார். சாய்ந்தமருதில் சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகளின் குடும்பங்களில் 2021_2023 கல்வியாண்டில் உயர்தரக் கல்வியை தொடர்கின்ற மாணவர்களின் கல்வி ஊக்குவிப்புக்காக குறித்த சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது.

சாய்ந்தமருது பிரதேசத்திலிருந்து 71 மாணவர்கள் இந்த புலமைப்பரிசில் கொடுப்பனவை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.றஸீட் (சமூகப் பாதுகாப்பு நிதியம்) முயற்சியினால் அவரது சகோதர் எம்.ஜுனூத் அன்பளிப்புச் செய்த பாடசாலை உபகரணங்கள் தந்தையை இழந்த மாணவர்களுக்கு அதிதிகளினால் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.எம்.முவஃபிக்கா, தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சமுர்த்தி முகாமையாளர்களான ஏ.எல்.யூ.ஜூனைதா, எஸ்.றிபாயா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# வீசா இரத்து செய்யப்பட்ட UK யுவதியின் அடிப்படை உரிமை மீறல் மனு தள்ளுபடி

## விசாரணைக்கு ஏற்காது நீதிமன்று நிராகரிப்பு



தன்னை இலங்கையிலிருந்து நாடு கடத்த குடிவரவு குடியகல்வு திணைக்களம் எடுத்துள்ள தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யக் கோரி, காலி முகத்திடல் போராட்டத்துக்கு உதவி ஒத்தாசை வழங்கும் வகையில் செயற்பட்டதாக கூறப்படும் பிரித்தானிய யுவதி கெய்லி ஃபிரேஸர் ( Kayleigh Fraser) தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்காது தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் நேற்று ( 14) உத்தரவிட்டது. அத்துடன் மனுதாரரான பிரித்தானிய யுவதிக்கு ஒரு இலட்சம் ரூபா வழக்கு கட்டணம் செலுத்துவதற்கும் உத்தரவிட்டு இவ்வாறு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான புவனேக அலுவிஹார, எஸ். துறை ராஜா, ஜனக் டி சில்வா ஆகியோரை உள்ளடக்கிய நீதியரசர்கள் குழாம் இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

காலி முகத்திடல் போராட்டத்துக்கு உதவி ஒத்தாசை வழங்கும் வகையில் செயற்பட்டதாக கூறப்படும் பிரித்தானிய யுவதி கெய்லி ஃபிரேஸர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகளுக்காக மன்றில் ஆஜரான அரசின் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் கனிஷ்கா டி சில்வா, மனு தொடர்பில் அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைப்பதாக அறிவித்தார்.

# பல ஆண்டுகள் நட்டத்தில் இயங்கிய தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு 14 கோடியே 50 இலட்சம் வருமானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை கடந்த ஆண்டில் 14 கோடியே 50 இலட்சத்துக்கும் அதிகமான வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக பெரும் நட்டத்தில் இயங்கிய மேற்படி சபை 2019 ஆம் ஆண்டில் மாத்திரம் 32 கோடி ரூபா நட்டத்தில் இயங்கியுள்ளது.

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை, 2019 ஆம் ஆண்டில் பல்வேறு தரப்பினருக்கும் 60 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளது. எனினும் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி அதனை 28 கோடியாக குறைக்க முடிந்துள்ளதாக சபை தெரிவித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் கால்நடை அபிவிருத்தி சபைக்கு புதிய பணிப்பாளர் சபையொன்று நியமித்தார்.

இரண்டு வருடங்களின் பின்னர் அந்த பணிப்பாளர் சபை இராஜினாமா செய்தது. அந்த பணிப்பாளர் சபை 2020 ஜனவரி 03 ஆம் திகதி நியமிக்கப்பட்டதுடன் அப்போது அதன் தலைவராக பேராசிரியர் மஞ்சுள சுமித் கடமை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையராக ஒன்றுதிரள்வோம் – வஜிர அபேவர்தன MP அழைப்பு



இலங்கைக்கு எதிரான சர்வதேச நிறுவனங்களின் தேவைகளை தோற்கடிக்க வேண்டுமாயின் இலங்கையர்கள் என்ற வகையில் ஓரணியில் திரள வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவரதன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுயுள்ளார்.

உலகில் இந்தியர்கள், இந்தியர்கள் என்ற வகையில் ஒன்றிணைக்கின்றனர்.ரஷ்யர்கள், ரஷ்யர்கள் என்ற வகையில் ஒன்றிணைக்கின்றனர். சீன மக்களும் தமது தேசிய அடையாளத்திற்காக ஒன்றிணைக்கின்றனர்.

இலங்கையர்களும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும். இந்த விடயத்தில் மக்கள் அரசியல் கட்சிகளுக்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும். அனைத்து அரசியல் கட்சிளும் இணைந்து தேசிய வேலைத் திட்டத்தை உருவாக்க அனைவரும் அழுத்தங்களை கொடுக்க வேண்டும்.

நாட்டிற்கு தேவையான தேசிய தலைமைத்துவம் நாட்டில் தற்போது உள்ளது. ரணில் விக்ரமசிங்கவினால், ஒரு நாட்டை கையாண்டு அதனை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்ல முடியும் என்பதை உலக நாடுகளின் தலைவர்கள் அறிவார்கள் எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.



கொழும்பு கதிரேசன் வீதி ஸ்ரீ காட்டு மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழாவில் அம்மன் வீதி உலா வரும் காட்சியை படத்தில் காணலாம்.

(படங்கள் வடகொழும்பு தினகரன் நிருபர்)

# கோழி இறைச்சியின் விலை 50 ரூபாவால் அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் கோழி இறைச்சி, முட்டை ஆகியவற்றின் விலைகள் அதிகரித்து வருவதையடுத்து கோழி இறைச்சியின் விலையை மேலும் 50 ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக கோழி இறைச்சி விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் புதிய விலை 1450 ரூபாவாகும் என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. கொழும்பு பெஸ்டியன் மாவத்தையிலுள்ள கோழி இறைச்சி விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் எம். ஐ .எம். இக்பால் இத்த கவலைத் தெரிவித்துள்ளார்.

கோழிஇறைச்சி, முட்டை ஆகியவற்றின் விலைகளை கட்டுப்படுத்தும் வகையில் கோழித் தீவனங்களுக்கு பயன்படுத்தும் சோளப் பயிர்ச்செய்கையை அதிகரிப்பதற்கு விவசாய அமைச்சு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## கடல்வழியாக வெளிநாடு... 03ஆம் பக்கத் தொடர்

மேலும், பணம் சம்பாதிப்பதற்காக பாதுகாப்பற்ற கப்பல்களை பயன்படுத்தி கடத்தல்காரர்கள் ஏற்பாடு செய்துள்ள மனித கடத்தலில் சிக்கி, நாட்டிலிருந்து சட்டவிரோதமாக குடியேற முயற்சித்து, உயிரை பணயம் வைத்து, சட்டத்தின் முன் தண்டனை பெறுவதை தவிர்க்குமாறு கடற்படை பொது மக்களிடம் வலியுறுத்துகிறது.

## பாராளுமன்றத்தை... 03ஆம் பக்கத் தொடர்

அல்லது www.parliament.lk என்ற இணையவழியூடாக இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

பல்கலைக்கழகங்களின் மாணவர் குழுக்கள், அரசின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளலாமென படைக்கல சேவிதர் மேலும் தெரிவித்தார்.

## மாணவர்களுக்கு தொடர்... 03ஆம் பக்கத் தொடர்

நம்பிக்கையுடன் க.பொ.த. (உ.தர) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேவையான வழிகாட்டலும் தைரியமும் கிடைக்குமென அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## 434 Kg கேரள கஞ்சாவுடன்... 03ஆம் பக்கத் தொடர்

பகுதிகளை உள்ளடக்கிய வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் ரோந்துப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

அதன்படி, இலங்கையின் வடமேற்கு கடல் பகுதியில் நேற்று முன்தினம் 13 ஆம் திகதி மாலை இலங்கை கடலோ ரக் காவல்படையின் 'சுரக்ஷா' கப்பலினால் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட நடவடி க்கையில், சர்வதேச கடற்பரப்பி னூடாக அத்துமீறிய இந்திய இழுவைப்படகு இலங்கையின் கடல் எல்லைக்குள் பிரவேசித்தது. புத்தளம் குதிரைமலை முனையில் இப் படகு இடைமறித்து பரிசோதிக்கப்பட்டது. அங்கு, இந்திய இழுவைப் படகில் 09 பைகளில் அடைக்கப்பட்ட 434 கிலோ (ஈரமான எடை) கேரள கஞ்சாவுடன் ஐந்து (05) இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

இந்திய இழுவைப் படகில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கேரள கஞ்சாவை மாற்றுவதற்காக இலங்கையிலிருந்து சென்ற கண்ணாடி இழை படகு மற்றும் அதில் பயணம் செய்த ஐந்து (05) இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா கையிருப்பின் மொத்த சந்தை மதிப்பு சுமார் 130 மில்லியன் ரூபா என நம்பப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இந்திய மற்றும் இலங்கை சந்தேக நபர்கள் 10 பேர் படகுகளுடன் கரைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கேரள கஞ்சா பொதிகள் கரைக்கு கொண்டு வரப்பட்டு, ஆரம்ப விசாரணைகளின் பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கல்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

## தாமரைக் கோபுர செயற்பாடு... 03ஆம் பக்கத் தொடர்

15 உற்சவங்களை நடத்துவதற்கான ஒப்பந்தம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தாமரைக்கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இந்த வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதி நிர்மாணப் பணிகள் முடிவடைந்தது. சீன நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள கடன் நிதியை 2024 ஆம் ஆண்டுக்குள் மீளச் செலுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இன்று உத்தியோகபூர்வமாக செயற்பாடுகளை ஆரம்பிக்கும் தாமரைக் கோரத்தை பார்வையிடுவதற்கு 500 ரூபா மற்றும் 2,000 ரூபா பிரவேசச் சீட்டுக்களை பெற்று அதனைப் பார்வையிடமுடியும் என்றும் வெளிநாட்டவர் 20 டொலரை கட்டணமாக செலுத்தி அதனைப் பார்வையிட முடியுமென்று அவர் தெரிவித்துள்ளார்.

## நேபாள தூதுவர்...

நேபாள தூதுவர் பாசு தேவ் மிஷ்ரா கலந்து கொண்டார். பல்கலைக்கழகக் கல்வி மற்றும் சுற்றுலா வாய்ப்புகளை இரு நாட்டு இளைஞர், யுவதிகளுக்கும் பயன்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்க இளைஞர் பரிமாற்றத் திட்டமொன்றை (Youth Exchange Program) நடைமுறைப்படுத்துவது குறித்து இக் கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டது. அதற்கான அடுத்த கட்டப்பணிகள் இந்நாட்டு வெளியுறவு அமைச்சுக்கும் நேபாள அரசாங்கத்துக்குமிடையே முன்னெடுக்கப்படவுள்ளன.

## கடன் சுமை...

விரைவாக பேச்சுவார்த்தையை மேற்கொள்வார்கள் என்றும் தனியார் கடன் வழங்குநர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என தான் நம்புவதாகவும் கிறிஸ்டினா கூறியுள்ளார்.

இலங்கையின் கடனை மறுசீரமைப்பது தொடர்பாக இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் லெசார்ட் நிதி ஆலோசனைக் குழு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக அரசாங்கம் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்கள் மற்றும்...

இந்த நீண்ட கால விடுமுறைக்கான சுற்றறிக்கையை அரசாங்கம் பல்வேறு நிறுவனங்களில் உள்ள மேலதிகமான ஊழியர்களை விடுவிப்பதற்காக அறிமுகப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். எனவே, நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய துறைகளை சேர்ந்த ஊழியர்களுக்கு இது பொருந்தாது எனவும் தாம் தற்போது இந்த புதிய சுற்றறிக்கையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## தாமரை கோபுரத்துக்கு...

என்பதோடு, அதனை விநியோகித்து தாமரை கோபுரத்திற்கு இலவச விளம்பரத்தினை ஏற்படுத்தி கொடுத்த தரப்பிற்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாகவும் சீன தூதரகம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் நாளை முதல் நாட்டு மக்கள் அனைவரும் தாமரை கோபுரத்தினை சென்று தரை தளத்தில் அனுமதி சீட்டினை பெற்றுக் கொண்டு பார்த்து மகிழுமாறும் சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 500 ரூபாய் முதல் 2000 ரூபாய் வரையிலும் 10 வயதிற்கு குறைந்தவர்களுக்கு 200 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையிலும் அனுமதி சீட்டுக்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

113 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தாமரை கோபுரத்தின் நிர்மாணப்பணிகள், கடந்த பெப்பிரவரி மாதம் 28 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

## தற்காலிக சாரதி அனுமதி பத்திரங்கள்...

வெளிநாடுகளுக்குச் செல்லும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டமே விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஓடர் செய்யப்பட்டுள்ள 4,50,000 அச்சிடப்பட்ட சாரதி அனுமதிபத்திர அட்டைகள் சில வாரங்களில் நாட்டுக்கு கிடைக்குமென்றும் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## பாதுகாப்பு வைப்புக்களில்...

வாரத்தோடு ஒப்பிடுகையில் இது 23.2 வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் நாட்டில் அரச பாதுகாப்பு வைப்பில் வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடைந்தன. 2020 ஆம் ஆண்டு முதல் அது பாரியளவில் முழுமையாக வீழ்ச்சியடைந்ததாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## செல்போன் வெடித்து...

குசும் காஷ்யப் தம்பதியரின் 8 மாத பெண் குழந்தை கட்டிலில் படுத்து உறங்கி கொண்டிருந்தபோது சுனில் சூரிய ஒளி மின்சாரம் மூலம் செல்போனுக்கு சார்ஜ் ஏற்றியுள்ளார். குழந்தை தூங்கி கொண்டிருந்த கட்டிலில் செல்போனை வைத்துவிடவே அனைவரும் அயர்ந்து தூங்கி கொண்டிருந்தனர். அப்போது செல்போன் திடீரென்று சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இதனால் கட்டில் தீப்பற்றி ஏறிய தொடங்கியது. இதில் 30 சதவீத தீக்காயம் அடைந்த அந்த பச்சிளம் பெண் குழந்தை மருத்துவமனைக்கு தூக்கி செல்லப்பட்டது. எனினும் படுகாயமடைந்த குழந்தை இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## இலங்கை பெண்ணுக்கு...

மேலதிக கல்விக்காக பிரிட்டனுக்கு சென்றதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவரின் உறவினரான வைத்திலிங்கம் துரைசாமி என்பவருக்கு 1937 ஆம் ஆண்டு 06ஆவது ஜோர்ஜ் மன்னரால் நைட் பதவி வழங்கப்பட்டுள்ளது. வனேஷா நந்தகுமாரன் அவருக்கு கிடைத்த சந்தர்ப்பம் பற்றி தெரிவிக்கையில், இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்குமென எதிர்பார்க்கவில்லையென்றும் வெயில், மழையை பொருட்படுத்தாது மகாராணிக்கு இறுதி கௌரவத்தை செலுத்தியதாகவும் குறிப்பிட்டிருந்தார். எலிசபெத் மகாராணியின் இறுதி கிரியைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி லண்டன் நகர் வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் நடைபெறவுள்ளதோடு தற்போது பூதவுடல் லண்டன் நகருக்கு கொண்டுவரப்பட்டு பொதுமக்களின் அஞ்சலிக்காக பக்ஹிங்ஹாம் மாளிகையில் வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாமலுக்கு எதிரான ...

கட்ட விசாரணையை டிசம்பர் 08 ஆம் திகதி மேற்கொள்வதற்கும் அன்றைய தினம் நீதிமன்றத்தில் சாட்சிகளை ஆஜராகுமாறும் நீதிபதி உத்தரவிட்டார். வழக்கின் மூன்றாவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள சுஜானி போகொல்லாகம சார்பில் ஆஜரான சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, செப்டம்பர் 20ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை பங்களாதேஷூக்கு விஜயம் செய்ய அனுமதி வழங்கினார்.

## மு.கா ஸ்தாபக...

பிரபல கவிஞரும், தென் இந்திய தமிழ் திரைப்பட நடிகருமான வ. ஐ .ச .ஜெயபாலன் கலந்து கொள்வார். நினைவுப் பேருரையை தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நிகழ்த்தவுள்ளதோடு, "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சமகால அரசியலும்" என்ற தொனிப் பொருளில் கட்சியின் தவிசாளரும், முன்னாள் வடகிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் உரையாற்றுவார். ஏனைய நினைவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நாடெங்கிலுமிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள் உட்பட, பெருமளவிலான கட்சி அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும் இந் நிகழ்வில் கலந்து கொள்வார்களென கட்சியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## எம்.பிமாரது வீடுகளை...

சந்தேகநபர்கள் தாக்கி தீவைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 19, 27, 29, 36 மற்றும் 55 வயதுடைய மெல்சிறிபுர மற்றும் மலகனே ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வாரியபொல குருநாகல் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழகத்தில் முதல்முறையாக...

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (14) திறந்து வைத்தார். தமிழகத்தில் முதல் முறையாக திண்டுக்கல் மாவட்டம் தோட்டனூத்தில் இலங்கை தமிழர்களுக்காக 17.17 கோடி ரூபா செலவில் கடந்த 08 மாதங்களில் 321 தனித்தனி வீடுகள் தலா 300 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளன.

இந்த வீடுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் புதன் கிழமை திறந்து வைத்தார்.சென்னையில் முதலமைச்சரின் முகாம் அலுவலகத்திலிருந்து காணொலி மூலம் திறந்து வைக்கும் நிகழ்வில் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உடனிருந்தார்.

திண்டுக்கல்,தோட்டனூத்து, அடியனூத்து, கோபால்பட்டியிலுள்ள முகாம்களை ஒருங்கிணைத்து கட்டப்பட்டுள்ள இந்த குடியிருப்பில் சகல உட்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், குடிநீர் தொட்டி, குளியலறை, நூலகம், பூங்கா, சன சமூக நிலையம், மைதானம், சாலைகள் உள்பட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு இலங்கை தமிழர்கள் முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து கூட்டுறவுத் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சிறுபான்மையினர் நலன் மற்றும் அயலகத் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ். மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாட்டில் 18 இலட்சம்...

உணவு மற்றும் விவசாய அமைப்பு 27 மில்லியன் அமெரிக்க டொலரை பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் தேசிய உணவு ஊக்குவிப்பு சபை ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான பகல் உணவு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் போஷாக்கு நிலைமையை அதிகரிப்பதற்காக போலிக் அமிலம், இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் உள்ளடங்கிய போஷாக்குள்ள பகல் உணவை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக தினமும் 82 மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுவதாகவும் அதனை நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் பெற்றுக் கொடுப்பதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மருந்து தட்டுப்பாட்டை...

இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எதிர்வரும் மாதத்தின் நடுப்பகுதியில் நிறைவுசெய்ய முடியுமென்றும் அதிகாரிகள் இதன்போது அமைச்சருக்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

நாட்டிற்கு மிகவும் பயனுள்ள வகையில் இந்த கடனுதவி வேலைத்திட்டத்தை பயன்படுத்திக்கொள்வது அவசியமென்றும் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான முதலீட்டு வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் உதவித்திட்ட அலுவலகம் ஆகிய வேலைத்திட்டத்தின் கீழ் அடுத்து வரும் ஆறு மாதங்களுக்கு நாட்டிற்குத் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை பெற்றுக்கொள்ள முடியுமென்று எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் தற்போது டொலரின் பெறுமதி 80% மாக அதிகரித்துள்ள நிலையில் திறைசேரியிலிருந்து ஒதுக்கீடுகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் இதன்போது அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்திய கடனுதவித் திட்டம் நிறைவுபெற்றாலும் மருந்து விநியோக வேலைத்திட்டம் வீழ்ச்சியடையாமல் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளதென சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், நாட்டிற்கு கிடைக்கவேண்டியுள்ள ஏனைய நன்கொடைகள் மற்றும் கடனுதவி வேலைத்திட்டங்களை மிகவும் பயனுள்ளதாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சீன உதவியின் இரண்டாம் கட்டம், உலக வங்கியின் நிதியுதவி, AIA உள்ளிட்ட நிதியுதவியை பெற்றுக்கொள்வது தொடர்பில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 50 மில்லியன் ரூபா தனியார் துறையினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க மருந்துகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

# இ.தொ.காங்கிரஸின் குழுவினர் ஜப்பான் தூதுவரை சந்தித்து கலந்துரையாடல்





**தலவாக்கலை குறூப் நிருபர்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் குழுவினர் ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் மிசுகோஷி ஹிடேகியை நேற்றுமுன்தினம் (13) சந்தித்து கலந்துரையாடினர். நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு ஜப்பான் அரசாங்கம் பல உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதேநேரத்தில் அண்மையில் மறைந்த ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே மறைவுக்கு இ.தொ.காவின் தூதுக்குழு இச்சந்திப்பின் போது அதன் இரங்கலை தெரிவித்தது. அத்துடன் எதிர்வரும் காலங்களில் மலையகத்தில் ஜப்பான் அரசாங்கத்தினூடாக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தவும்,திறன் மற்றும் தொழில் சார்ந்த கல்வி முறைகளை உருவாக்குவது தொடர்பில் ஜப்பான் நாட்டு தூதுவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அத்தோடு ஜப்பான் நாட்டுக்கான தொழில்வாய்ப்பு தொடர்பாகவும் இச்சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டன. மேலும் நாட்டின் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையில் ஜப்பான் அரசாங்கத்தின் நட்பு ரீதியான உதவிகளுக்கும் இதன்போது இ.தொ.கா தூதுக்குழு நன்றி தெரிவித்தனர். இச்சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான்,தலைவர் செந்தில் தொண்டமான், சட்டத்தரணி மாரிமுத்து, இ.தொ.காவின் சிரேஷ்ட உறுப்பினர் மதியுகராஜா, கட்சியின் உபதலைவரும் வெளி விவகாரங்களுக்கு பொறுப்பான பாரத் அருள்சாமி உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

111

**ஹொண்டா கார்கள் விற்பனைக்கு**

WP KB-8075 Honda UA CL7, 2004, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714542958. 054112

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

WP YA-2678 Bajaj, 2010, SP AAO-8777 Bajaj, 2014, WP ABA-4025 Bajaj, 2014, WP YT-2125 Bajaj, 2011, three wh eel கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 054113


## நீடிப்பு அறிவித்தல்

**டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட்**

**HEALTH ASSESSMENT EVALUATION OF 10 CONE ROOF VERTICAL RIVETTED TANKS AT TPTL, TRINCOMALEE**

**TPTL/BD/22/03**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFPs) ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள ஆலோசகர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமான டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட் சார்பில் திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழுவின் தலைவரால் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இந்த முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதி முடிவுறுத்தல் நேரமான 2022-09-15ஆம் திகதி பி.ப. 2.00 மணியானது இப்போது 2022-09-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னைய விளம்பரத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (திட்டமிடல்),**
**டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட்,**
**4ஆம் தளம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09,**
**தொலைபேசி: 076-8283274**

## 1964ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் ஆத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ்குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2022.09.29ஆந் திகதி மஹவ பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022/04/08 மற்றும் 2274/28 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும். அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | | குருநாகல் | | |
| பிரதேச செயலாளர் பிரிவு | | மஹவ | | |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல | | 4-3/10/2019/MV/445-B DIVMH/LAND/ACQVR/19/13 | | |
| **கிராம சேவகர் பிரிவு** | **ஆரம்ப வரைபட இல** | **கிராமத்தின் பெயர்** | **துண்டு இல** | **முழு காணியின் விஸ்தீரணம்** |
| 145 திவுல்லேவ | இ.கி.வ. இலக்கம் 1854 இல் பிற்சேர்க்கை இல. 13, தாள் இலக்கம் 17 | திவுல்லேவ | 410, 412, 413, 415, 416 வரை | 0.2137 ஹெக்டயார் |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல | | 4-3/10/2019/MV/445-C DIVMH/LAND/ACQVR/9/3/5B | | |
| **கிராம சேவகர் பிரிவு** | **ஆரம்ப வரைபட இல** | **கிராமத்தின் பெயர்** | **துண்டு இல** | **முழு காணியின் விஸ்தீரணம்** |
| 144 பயிலிகம | இ.கி.வ. இலக்கம் 1855 பிற்சேர்க்கை இல 8 தாள் இலக்கம் 10 | பயிலிகம | 222, 224- 235, 237, 239, 240, 243, 245-251, 253, 255, 257, 258, 261, 262 வரை | 3.8794 ஹெக்டயார் |

**பி.எம். நதுன் ஆர் சம்பத்**
**பிரதேச செயலாளர்,**
**மஹவ.**

**பிரதேச செயலாளர், காரியாலயம், மஹவ.**
**திகதி : 2022.09.05**

## பிஸ்கல் ஏல விற்பனை அறிவித்தல்
## கண்டி மாவட்ட நீதிமன்றத்தில்

1994 ஆம் ஆண்டு இல.09 எனும் கடன் மீள் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள்) (திருத்தப்பட்ட) சட்டதின் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டு இல.02 எனும் கடன் மீள் அறவிடலின் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கை மற்றும் தொடர்புபட்ட காரணங்கள் தொடர்பானது.

பீபல்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ
முந்தைய பெயர்

பீபல்ஸ் லீசிங் கம்பனி பீ.எல்.சீ
இல. 1161, மருதானை வீதி,
கொழும்பு-10

வழக்கு இல.: **DDR/510/2017**
எஸ்கீசி இல : **213/19**

**வழக்காளி**

-எதிராக-

1. அஷோ கார்ஸ் ஜப்பான் (பி.வி.டி) எல்.டி.டீ
(Asho Cars Japan (Pvt) Ltd)
இல. 396, கடுகஸ்தொட வீதி, கண்டி
2. ஹேரத் முதியன்செலாகே அசோக பிரியந்த பண்டார ஹேரத் மறுபெயர் ஹேரத் முதியன்செலாகே அசோக பிரியந்த பண்டார ஹேரத்
இல. 396, கடுகஸ்தொட வீதி, கண்டி
3. கஹந்தகமகே சந்திமா கயானி கஹந்தகம
இல. 147, ஹல்கொல்ல 02, ஹபகஸ்தலாவ, நாவலப்பிட்டி

**எதிராளிகள்**

**தற்போது கண்டி, கடுகஸ்தொட வீதி, இல. 396 எனும் 1ஆம் எதிராளியான அஷோ கார்ஸ் ஜப்பான் (பி.வி.டி) எல்.டி.டீ. (Asho Cars Japan (Pvt) Ltd), தற்போது கண்டி, கடுகஸ்தொட வீதி, இல. 396 எனும் முகவரியில் குடியிருக்கும் 02ஆம் எதிராளியான ஹேரத் முதியன்செலாகே அசோக பிரியந்த பண்டார ஹேரத் மறுபெயர் ஹேரத் முதியன்செலாகே அசோக பிரியந்த பண்டார ஹேரத் மற்றும் நாவலப்பிட்டி, ஹல்கொல்ல 03, இல.147, எனும் முகவரியில் குடியிருக்கம் 3ஆம் எதிராளியான கஹந்தகமகே சந்திமா கயானி கஹந்தகம எனும் நபர்களுக்கு,**

2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி. அமாலி ரணவீர முன்னிலையில் முடிவுறுத்துவதற்காக சமூகமளித்த சந்தர்ப்பத்தில் பிராதுடன் இணைக்கப்பட்டுள்ள கோவைகளை கருத்தில் கொண்டதன் பின்னர் வழக்காளி நிறுவனத்தின் அனுமதி பெற்ற அதிகாரியொருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கூற்றில் அடங்கியுள்ள கூற்றுக்கள் தொடர்பாக திருப்தியடைந்து கட்டளையிடும் போது முற்றான கட்டளை செய்யப்பட்ட பிரிவு கீழ் காணப்படும் தொகை எதிராளிகளினால் வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என்றும்.

அவ்வாறே, 2017.08.25 ஆம் திகதிக்கு இலங்கை பணத்தில் ரூபாய் பத்து கோடி அறுபத்தி நாலு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து நானூற்று தொன்னூற்று மூன்று மற்றும் பதினெட்டு சதம் (ரூ.106,412,493/18) தொகை அல்லது பணத்தில் மூலதன கடன் தொகையாக அறவிட வேண்டிய ரூ. 63,470,776/63 தொகை மீது 2017.08.26ஆம் திகதி தொடக்கம் முற்றான திகதி வரை வருடத்திற்கு 12% வீதம் அளவில் அமுலிலுள்ள வட்டி சதவீதத்தின் மீது கணக்கிடப்பட்ட வட்டியும், முற்றான கட்டளை திகதி தொடக்கம், முற்றான கட்டளை சம்பூர்ண தொகை மீதான சட்டப்படியான வட்டியும் குறித்த தொகையை அறவிடுவதற்காக 1994ஆம் ஆண்டு இல. 09 எனும் கடன் மீள் அறவிடல் (விஷேட கட்டளை) (திருத்தப்பட்ட) சட்டத்திலிருந்து திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டு இல. 02 எனும் கடன் மீள் அறவிடும் (விஷேட கட்டளை) சட்டத்தில் 04வது பிரிவின் படி எதிராளிகளுக்கு எதிராக உள்நுழைக்கப்படும் பின்முற்றான கட்டளை படி வழக்கு கட்டணம் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட எதிராளிகளினால் வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என்றும்,

மேலும், குறித்த வழக்கில் முற்றான கட்டளையை பூர்த்தி செய்ய குறித்த எதிராளிகள் தவறியுள்ளார்/ புறக்கணித்துள்ளாராயின், குறித்த வழக்கிலிருந்து எனக்கு வழங்கப்பட்டுள்ள எஸ்கீஸீ அதிகாரத்திற்கு அமைய மேற்படி பெயர் குறிப்பிப்பட்ட எதிராளிகளுக்கு உரிமையின் கீழ் இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தின் உரிமை, உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்பான அனைத்தும், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் எனக்கு வழங்கப்பட்ட எஸ்கீஸியின் மீது கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளர்/ பிரதி பிஸ்கால் ஆகிய நான் 2019ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் 13 ஆம் திகதி முறையாக தடைசெய்யப்பட்ட கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம்,

2022ஆம் ஆண்டு 09ஆம் மாதம் 30ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு குறித்த ஆதனம் அமைந்துள்ள கடுகஸ்தொட வீதி, வரி பணம் இல. 396 ஆனது என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**ஆதனத்திற்கு உள்நுழையும் பாதை**
கண்டி நகர மத்தியில் (மணிக்கூண்டு கோபுரம்) இனை கடந்து தலதா வீதியில் நெடுவாக 400 மீட்டர் அளவு கடந்து க்குவீன்ஸ் ஹோட்டல் சந்தியிலிருந்து இடது புறமாக திரும்பி டீ.எஸ். சேனாநாயக்க வீதியை கடந்து 03 கி.மீ. அளவு பணயம் செய்யும் போது வீதியில் வலது புறத்தில் இக்காணி காணப்படும்.

**செலுத்தும் முறை**
விற்பனை நிறைவுபெற்றவுடன் கீழே காணப்படும் செலுத்துகை கொள்வனவாளரினால் எனக்கு செலுத்த வேண்டிய மொத்த தொகையில் மட்டும் புரியப்படுவதுடன் காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(i)சம்பூர்ண கொள்வனவு விலையில் 25% வீதம் தொகையும், மிகுதி 75% வீதம் ஏல விற்பனை திகதி தொடக்கம் முப்பது (30) நாட்களுக்குள் மேற்படி இலக்கம் கொண்ட வழக்கிற்கு நீதிமன்றத்தில் வைப்பிடப்பட வேண்டும்.
(ii) பிஸ்கால் தொகை/ ஏல விற்பனை தொகை மற்றும் அரசாங்கத்தின் தொகை

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி மாநகர சபை அதிகார எல்லைக்குள் கண்டி பிரதேச செயலகப் பிரிவிற்குள் சியம்பலாகஸ்தென்ன இல. 226 கிராம அலுவலர் பிரிவில் கடுகஸ்தொட வீதியில் அமைந்துள்ள மதிப்பீட்டு இல. 396 எனும் கட்டடம் எஸ்.டி. பிரிஜட் எனும் பெயரிடப்பட்ட காணிக்கு அனுமதி பெற்ற அளவையாளர் ஜி.ஆர்.டபிள்யு. எம். வீரகோன் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2011/06/05 ஆம் திகதி வரைபட இல. 19403 எனும் வரைபடத்திலிருந்து பிரிந்து அளந்து தயாரிக்கப்பட்ட லொட் 01 பிரிவிற்கான எல்லைகள் :

வடக்காக : மதிப்பீட்டு இல. 396/1 எனும் வளாகம், கடுகஸ்தொட வீதி
வட-கிழக்காக : மதிப்பீட்டு இல 01 எனும் காணி சியம்பலாகஸ்தென்ன விகாரை மற்றும் அதற்கு உரித்தான காணி
வட கிழக்காக : மதிப்பீட்டு இல. 394, கடுகஸ்தொட வீதி,
தெற்காக : கடுகஸ்தொட வீதி
மேற்காக : மதிப்பீட்டு இல. 396/1, கடுகஸ்தொட வீதி

எனும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள இருபத்தி ஆறு பர்ச்சஸ் தசம் நான்கு ஐந்து (ஏ:0, றூ:0, ப: 26.45) விஸ்தீரனமான தரை அளவு மற்றும் அதற்குள் அமைந்துள்ள மேற்படி வரைபட இலக்கம் 19403 எனும் வரைபடத்தின் படி கட்டடம், மரங்கள், செடி கொடிகள் ஆகிய அனைத்துடனுமாகும்.

மேற்படி காணி கீழ் காணப்படும் காணியுடன் மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்டது.

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி மாநகர சபை அதிகார எல்லைக்குள் கண்டி பிரதேச செயலகப் பிரிவிற்குள் சியம்பலாகஸ்தென்ன இல. 226 கிராம அலுவலர் பிரிவில் கடுகஸ்தொட வீதியில், கடுகஸ்தொட, இல. 400 மற்றும் மதிப்பீட்டு இல. 396, 396/1 எனும் கட்டிடத்துடன் எஸ்.டி. பிரிஜட் எனும் பெயரிடப்பட்ட காணிக்கு அனுமதி பெற்ற அளவையாளர் எஸ்ம். தல்வத்த அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1960.07.31 ஆம் திகதி கொண்ட இல. 647 எனும் வரைபடத்தின் லொட் இல. 3, லொட் இல. 4 ஏ, லொட் இல. 1 ஏ, எனும் துண்டுகளுக்கான எல்லைகள் :

வடக்காக : மேற்படி வரைபடத்தின் லொட் 4 ஏ மற்றும் லொட் 1 பீ
வட-கிழக்காக : மதிப்பீட்டு இல 01 எனும் காணி சியம்பலாகஸ்தென்ன விகாரை
வட கிழக்காக : எல்லை வேலியொன்றினால் பிரிக்கப்பட்ட மதிப்பீட்டு இல. 394 மற்றும் கடுகஸ்தொட வீதி,
தெற்காக : கடுகஸ்தொட வீதி
மேற்காக : 647 பீ வரைபடத்தின் துண்டு இல. 4 பீ

எனும் எல்லைக்குள் அமைந்துள்ள இருபத்தி ஏழு தசம் நான்கு ஒன்பது (ஏ: 0, றூ: 0, ப: 27.49) விஸ்தீரணமான வரைபட இலக்கம் 647 பீ தரை அளவு மற்றும் கட்டடம், மரங்கள், செடி கொடிகளுடனும் ஆகும்.

ஆதிகாரம் பெற்ற அளவையாளர் எஸ். எம். தல்வத்த அவர்களின் இல 647 பீ மற்றும் 1960.07.31 ஆம் திகதி மேற்படி துண்டு 3, 4ஏ, 1ஏ, வேறு அளவையாளரொருவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி மாநகர சபை அதிகார எல்லைக்குள் கண்டி பிரதேச செயலகப் பிரிவிற்குள் சியம்பலாகஸ்தென்ன இல. 226 கிராம அலுவலர் பிரிவில் கடுகஸ்தொட வீதியில் அமைந்துள்ள மதிப்பீட்டு இல. 396 எனும் கட்டிடத்துடன் எஸ்.டி. பிரிஜட் எனும் பெயரிடப்பட்ட காணிக்கு அனுமதி பெற்ற அளவையாளர் எம். ஆய். ஆப்தீன் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1996.05.14 ஆம் திகதி வரைபட இல. 985 எனும் வரைபடத்திலிருந்து பிரிந்து அளந்து தயாரிக்கப்பட்ட லொட் 01 பிரிவிற்கான எல்லைகள் :

வடக்காக : மதிப்பீட்டு இல. 396/1எனும் வளாகம், கடுகஸ்தொட வீதி
வட-கிழக்காக : மதிப்பீட்டு இல 01 எனும் காணி சியம்பலாகஸ்தென்ன விகாரை மற்றும் அதற்கு உரித்தான காணி
வட கிழக்காக : மதிப்பீட்டு இல. 394, கடுகஸ்தொட வீதி,
தெற்காக : கடுகஸ்தொட வீதி
மேற்காக : மதிப்பீட்டு இல. 396/1, கடுகஸ்தொட வீதி

எனும் எல்லைக்குள் அமைந்துள்ள இருபத்தி ஏழு தசம் ஏழு (ஏ:0, றூ:0, ப:27.07) விஸ்தீரணமான வரைபட இலக்கம் 985 தரை அளவு மற்றும் கட்டடம், மரங்கள், செடி கொடிகளுடனும் ஆகும்.

இக் காணி தற்போது கண்டி காணிப் பதிவுகள் அலவலகத்தில் இல. A 522/134 எனும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது..

கையொப்பம்:
பதிவாளர்/ உதவி பிஸ்கல்
மாவட்ட நீதிமன்றம்
கண்டி

2022ஆம் ஆண்டு 08ஆம் மாதம் 12ஆம் திகதி

## அறிவித்தல்

**சப்ரகமுவ மாகாண சபை**

## 2023 ஆண்டிற்காக வாகன தகைமை சான்றிதழ் பத்திரங்களை விநியோகிக்கும் முகமாக கராஜ்களைப் பதிவு செய்தல்

பஸ் மற்றும் லொறி போன்ற மக்கள் சேவையில் ஈடுபடுகின்ற வாகனங்களுக்கான தகைமைச் சான்றிதழ் பத்திரங்களை விநியோகிக்கும் வேலையை பொறுப்பேற்பதற்கு சப்ரகமுவ மாகாண சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அரச துறை கராஜ்கள், வ/ப சப்ரகமுவ பஸ் கம்பனிக்குச் சொந்தமான பஸ் டிப்போக்கள் மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழ் அல்லது கம்பனிகள் பதிவு செய்தற் சான்றிதழ்களுடனான தனியார் துறை கராஜ்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பங்கள் விநியோகித்தல்
சப்ரகமுவ மாகாண சபையின் மாகாண திறைசேரிக்கு வருகைதந்து ரூ. 500/- மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் 2022.09.15 முதல் 2022.10.17 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படுவதுடன் கட்டணங்கள் செலுத்தாமலேயே மேற்படி விபரப் பத்திரங்களை அக்கால எல்லைக்குள் பரீட்சித்துப் பார்க்கலாம். விண்ணப்பத்துடன் ஏனைய விபரங்களுடனான விபரப் பத்திரங்களும் வழங்கப்படும்.

02. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்.
விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2022.10.18ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் மாகாண திறைசேரி, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'தகைமைச் சான்றிதழ் பத்திரங்களை விநியோகிப்பதற்காக கராஜ்களைப் பதிவு செய்தல் - 2023' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 045-2233962 மற்றும் 045-2222893 தொ.பே. இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.

**2022 செப்டம்பர் 12ம் திகதி**
**மாகாண திறைசேரி**
**சப்ரகமுவ மாகாண சபை**
**புதிய நகரம், இரத்தினபுரி**

**சுனில் ஜயலத்**
**பிரதம செயலாளர்**
**சப்ரகமுவ மாகாண சபை**


திகதி 13.09.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4877
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,072,910.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,601,012.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 5 1 2 8 7 6

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 907
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,234,660.00
வெற்றி இலக்கினம் S வெற்றி இலக்கங்கள் 14 17 64 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 125,378,551.20

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3119
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,158,040.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 25 63 66 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,005,773.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1332
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,782,940.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 2 9 1 9 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,646,445.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 186
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,762,320.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 01 03 33 45
விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,671,135.00

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1225
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,676,800.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 270,280,426.00
G 13 41 46 56 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# நகர்வலம்






# நாட்டையும் அரச நிறுவனங்களையும் மறுசீரமைப்பது காலத்தின் தேவை

## சகலரும் இணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் துமிந்த திசாநாயக்க எம்.பி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

நாட்டையும் அரச நிறுவனங்களையும் மறுசீரமைப்பது காலத்தின் தேவையாகும். தற்போதைய நிலமைக்கமைய அரச நிறுவனங்களை சீரமைப்பது இன்று அவசியமாகும். அரச ஊழியர்கள் 60 வயதுடன் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதை போல் அரசியல்வாதிகளும் 60 வயதுடன் அரசியலில் இருந்து முழுமையாக விலகிக்கொள்ள வேண்டும். சிரேஷ்ட அரசியல்வாதிகள் என குறிப்பிட்டுக்கொள்பவர்கள் தங்களின் சுய இலாபத்திற்காக அரசியலில் செல்வாக்கு செலுத்துகிறார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளரும் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.



அநுராதபுரம் இலங்கை போக்குவரத்து சபை கூட்ட மண்டபத்தில் இலங்கை போக்குவரத்து சபை ரஜரட்ட பிரதேச முன்னேற்ற மதிப்புரைகள் கூட்டம் கடந்த (10) நடைபெற்ற போது அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அரச போக்குவரத்து சேவை நட்டமடைவதற்கு அரசியல்வாதிகள் பொறுப்புகூற வேண்டும். அரசியல்வாதிகள் தங்களின் சுய தேவைகளுக்காக அரச நிறுவனங்களை நட்டமடைய செய்துள்ளனர். அரசியல் நியமனங்களினால் இன்று அரச நிறுவனங்கள் பாரிய நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

இன்று நஷ்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்களின் இழப்பை எமது எதிர்கால சந்ததியினருக்கும் விட்டுச் செல்கின்றோம். அதனால் அரசியலை ஒரு பக்கம் வைத்துவிட்டு தேர்தல் காலத்தில் அரசியல் செய்வோம். தற்போது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் சகலரும் சேர்ந்து நாட்டை மீட்டெடுக்க முன்வர வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

# நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் இன்று வருடாந்த பரிசளிப்பு விழா



களுத்துறை மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகளிலொன்றான சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) வருடாந்த பரிசளிப்பு விழா இன்று (15) காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பாக்கிர் மாக்கார் மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜனாபா பஹீமா பாயிஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சா/த, உ/த பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவிகள் உட்பட பல்கலைக்கழகத்திற்கு இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவிகளும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் களுத்துறை வலய கல்விப்பணிப்பாளர் திரு. ஏ.யூ. விக்கிரமாராச்சி பிரதம அதிதியாகவும் வலய உதவி கல்விப்பணிப்பாளர் திரு. எம்.என்.எச்.டி.பி. டீசில்வா கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிப்பதோடு விழாவின் விசேட அதிதிகளாக தமிழ் பிரிவிற்கான உதவி கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். ஜெயகுமார், பேருவளை பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. எம்.ஏ.ஜே.யூ. சோமரட்ன மற்றும் வலய தமிழ் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம். இல்யாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளதாக பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார்.






ஹடோவிட்ட முஸ்லிம் மகளிர் கல்லூரிற்கு நீண்ட கால தேவையாக இருந்த பலகோடி ரூபா பெறுமதியான 3 மாடிகளைக் கொண்ட கட்டிடம் பரோபகாரியும் கொடைவள்ளலுமான அல்ஹாஜ் பஸால் அவர்களின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் (13) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. கல்லூரி அதிபர் எம்.எம்.எம். சர்ஜுன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் நன்கொடையாளர் பஸால் ஆப்தீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைபவரீதியாக திறந்து வைத்தார். இதன்போது கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவிகளும் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் கம்பஹா வலயக் கல்விப் பணிப்பாளர் அனுர பிரேமலால், கம்பஹா மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ் மொழி) எம்.ரீ.எம். தௌபீக், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஏ.ஏ.எம். சிறாஸ் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். படங்கள்: அஷ்ரப் ஏ சமத்

# கட்டுத்துவக்கில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கட்டுத்துவக்கில் அகப்பட்டு உயிரிழந்திருந்த குடும்பஸ்தர் ஒருவருடைய சடலத்தினை எட்டவீரவெவ காட்டுப்பகுதியில் இருந்து மரதன்கடவள பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 11 ஆம் திகதி பகல் சம்பவயிடத்திற்கு சென்றுள்ள பொலிஸாரே பிரதேச மக்களின் உதவியுடன் சடலத்தினை மீட்டுள்ளனர். 52 வயதுடைய எட்டவீரவெவ, மரதன்கடவள பகுதியை வசிப்பிடமாக கொண்ட குடும்பஸ்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

# பள்ளிப் போருவை மு.வியின் பவள விழா நிகழ்வுகள் நாளை

ஹெம்மாதகமை பள்ளிபோருவை முஸ்லிம் வித்தியாலயத்தின் 75 வருட பூர்த்தி பவள விழா நாளை (16) வெள்ளிக்கிழமை காலை அதிபர் அஷ்ஷெய்க் எம்.எஸ். எம். நிஸாம் அன்வாரி தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற ஏற்பாடாகியுள்ளது.

பிரதம அதிதியாக சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. குறுப்பு ஆரச்சியும் விஷேட அதிதியாக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் அன்ஷாப் தாவூத், ஆரம்ப பிரிவு பணிப்பாளர் கோரலகே ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் உட்பட முக்கிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# மாணவர் தலைவர்கள் சின்னம் சூட்டும் விழா

கே/மாவ/தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக ஊரின் முதலாவது கொமாண்டோ படையணி வீரரான M.R.M LUTHFY கலந்து சிறப்பித்தார். 22 வருட சேவையை நிறைவு செய்துள்ள பல இராணுவ பதக்கங்களுக்கு சொந்தக்காரரான மலேசியா Interpol மற்றும் Pakistan இல் இலங்கை தூதரகம் போன்ற வெளிநாடுகளிலும் பணியாற்றிய அவர் பாடசாலையின் பழைய மாணவராவார்.



இந்நிகழ்வின் போது மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவியர் சங்கம், இரு ஜும்ஆ பள்ளிவாசல்களினதும் நிர்வாக சபைகள் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றதுடன் பாடசாலைக்கு வெளியில் மாணவர்களின் ஒழுக்க விடயங்களை கவனிப்பதில் மேற்படி அமைப்புக்கள் இணைந்து செயற்படும் ஆரம்ப நிகழ்வாகவும் இது அமைந்தமை சிறப்பம்சமாகும்.

பாடசாலையில் ஏற்பட்டுள்ள பிரதி அதிபர் வெற்றிடத்திற்கு இப்பாடசாலையின் உப அதிபர்களில் ஒருவரான எம்.எம்.எம். ஸகி உத்தியோகபூர்வமாக நியமிக்கும் நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.




கொழும்பு BMICH இல் நடைபெற்ற தேசிய சமாதான உச்சி மாநாட்டின் பரிசளிப்பு விழாவிற்கு கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவர் வணபிதா சந்துரு பெர்னாண்டோவுக்கு ஜப்பானிய தூதர் மிசுகோஷி ஹிடேகி அவர்களால் "விஷ்வ கீர்த்தி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



கல்விச் சுற்றுலா மேற்கொண்டு அண்மையில் கொழும்புக்கு வருகை தந்த ஹம்பாந்தோட்டை ஸாஹிராக்கல்லூரி மாணவர்கள் லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு வருகை தந்து பார்வையிட்ட பின்னர் குழுவாக எடுத்துக்கொண்ட படம்.

# புத்தளத்தில் ஆயுர்வேத வைத்திய நிலையம் திறந்து வைப்பு




புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலவச ஆயுர்வேத வைத்திய நிலையம் (13) நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் கௌரவ அதிதியாக வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் வைத்தியர் அனுர செனவிரத்ன உட்பட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். நவவி மற்றும் நகர சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். வைத்தியர் அனுர செனவிரத்ன இங்கு உரையாற்றுகையில்,

நகரசபையின் மக்கள் பணிகளை பாராட்டி பேசியதுடன் மாநகர சபையாக தரமுயரும்போது மேலும் பல அனுகூலங்கள் கிடைக்கப்பெறுமெனவும் அதற்கான தனது ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்குவதாகவும் தெரிவித்தார்.

நகரபிதா உரையாற்றுகையில்,

மறைந்த தலைவர் மர்ஹூம் கே.ஏ. பாயிஸ் அவர்களே இத்திட்டத்தின் ஆரம்பகர்த்தா எனக் குறிப்பிட்டதுடன், அன்னார் விட்டுச் சென்ற பணிகளையும் இணைத்தே தமது செயற்திட்டங்களை தொடர்ந்தும் தமது பதவிக்காலத்தில் முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.




## வட. மாகாண சுகாதாரத்துறை நன்கொடையாளர்களுக்கு பணிப்பாளரினால் விசேட அறிவித்தல்

*கிளிநொச்சி குறூப் நிருபர்*

வடக்கு மாகாண சுகாதார துறைக்கு நன்கொடை அளிப்பவர்களுக்கு சுகாதார பணிப்பாளரினால் அறிவித்தலொன்று விடுக்கப்பட்டுள்ளது. அவ்வறிவித்தலில், 'சிறு துளி பெரு வெள்ளம்' என்ற சான்றோர் வாக்குக்கு அமைய நன்கொடையாளர்கள் அளிக்கும் ஒவ்வொரு துளியும் பெரு வெள்ளமாகி எமது புனித பணியை முன்னெடுக்க உதவுகின்றது.

எனவே எமது மாகாணத்தின் எந்தவொரு வைத்தியசாலைக்கோ பொது சுகாதார மையங்களுக்கோ, அல்லது அரசாங்கத்தின் சுகாதார நிறுவனங்களுக்கோ நன்கொடை வழங்கும் மக்கள் பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தாங்கள் அளிக்கும் எந்தவொரு நன்கொடையினையும் பெற்றுக்கொண்டமைக்கான உறுதிப்படுத்திய கடிதமொன்றை பெற்றுக்கொள்ளுங்கள். அத்தோடு அக்கடிதத்தில் நன்கொடை பெறப்பட்ட நாள், நேரம், பெறப்பட்ட நன்கொடையின் பெறுமதி,அதன் விபரம்,பெறப்பட்ட நன்கொடையானது நிறுவன பதிவேட்டில் பதியப்பட்ட பதிவெண், நன்கொடை பெற்றுக்கொண்ட நிறுவனத் தலைவரின் உத்தியோகபூர்வ முத்திரையுடன் கடிதம் போன்ற விடயங்கள் அடங்கியிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதேவேளை நன்கொடையினை பெற்றுக்கொண்டவர்கள் அக்கடிதத்தின் பிரதியினை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கிலுள்ள மத்திய கணக்காய்வு அலுவலகம் மற்றும் மாகாண கணக்காய்வு திணைக்களம் ஆகியவற்றுக்கு பதிவு தபாலில் அல்லது தொலைநகலில் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் மாகாண சுகாதார

சேவைகள் பணிப்பாளருக்குரிய பிரதியினை 0773868579 என்ற உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கத்திற்கு வட்ஸ் அப், வைபர், டெலிகிராம், சிக்னல் செயலிகள் மூலம் அனுப்பி வைக்க வேண்டுமென வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் மருத்துவர் திலிப் லியனகே ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

## வன்னி அமைச்சர் மூலம் கிராமப்புறங்கள் வலுப்பெற வேண்டும்

*ஓமந்தை விஷேட நிருபர்*



வன்னி அமைச்சர் மூலம் கிராமப்புறங்கள் வலுப்பெற வேண்டுமென என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கிராமிய அபிவிருத்தி அமைச்சராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஏற்கின்ற சூழலிலேயே நானும் அங்கு சென்றிருந்தேன். பொருளாதார அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு அதில் கலந்து கொள்ளாமல் இருப்பது நல்லதல்ல.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரே பதவி ஏற்றிருக்கின்றார். இதிலே குறிப்பாக கூற வேண்டிய விடயம் என்னவெனில் எங்களுடைய கிராமப்புறங்கள் இதனூடாக வலுப்பெற வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

இதே அமைச்சர் பிழைவிடின் அதனை தட்டி கேட்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இருக்கின்றது. நிச்சயமாக தட்டி கேட்போம்.

மக்களுடைய நலன் கருதி அபிவிருத்தி சம்பந்தமாக இருக்கின்ற விடயங்களிலே நாங்கள் கவனம் செலுத்த வேண்டும். எங்களுடைய மக்களும் பட்டினியை சந்தித்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இவ்வாறான விடயங்களை பயன்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி நாடளாவியரீதியில் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை 5 ஆவது நாளாக மன்னாரில் நேற்று புதன்கிழமை(14) இடம் பெற்றது.

## வாள்களுடன் ஒருவர் கைது

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்.வட்டுக்கோட்டை துணைவி பகுதியில் 11 வாள்களுடன் 22 வயதான இளைஞன் ஒருவனை பொலிஸ் விசேட அதிரடி படையினர் கைது செய்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துணைவி பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

துணைவி பகுதியிலுள்ள ஆலயமொன்றில் பலவிதமான வடிவங்களில் செய்யப்பட்ட வாள்கள் காணப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடி



படையினருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதனையடுத்து அங்கு விரைந்த அதிரடி படையினர் ஆலயத்தினை சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தினர். அதன் போது அங்கிருந்து பல வடிவங்களில் செய்யப்பட்ட 11 வாள்களை மீட்டனர். அத்துடன் 22 வயதான இளைஞனையும் கைது செய்தனர்.

மீட்கப்பட்ட வாள்களையும், கைது செய்யப்பட்ட இளைஞனையும் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை இளைஞனின் தந்தை கோயிலின் பூசகர் எனவும், வாள்களுடன் கலையடி, குறி சொல்பவர் எனவும், அதற்காக பயன்படுத்தும் வாள்களே அவை என இளைஞனின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

## போதைப் பொருளுடன் நான்கு பேர் கைது

*யாழ். விசேட நிருபர்*

யாழ்.மானிப்பாய் சுதுமலைப்பகுதியில் போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 61 கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நால்வரும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் மூவர் யாழ்ப்பாணத்தையும் ஒருவர் கொழும்பையும் சேர்ந்தவரென தெரியவருகிறது.

## தாய்ப்பால் தொண்டையில் இறுகி பெண் சிசு மரணம்

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிறந்து நான்கு நாட்களேயான பெண் சிசுவொன்று தாய்ப்பால் தொண்டையில் இறுகி உயிரிழந்துள்ளது.

மயிலிட்டி வடக்குப்பகுதியைச் சேர்ந்த தம்பதியினரின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. தம்பதியினருக்கு கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் குழந்தை பிறந்துள்ளது. இந்நிலையில் குழந்தைக்கு பால் ஊட்டிய பின்னர் குழந்தை அசைவற்று இருந்துள்ளது. இதனையடுத்து வைத்தியர்கள் பரிசோதித்து பார்த்த போது குழந்தை உயிரிழந்ததாக தெரிவித்தனர். உடல்கூற்று பரிசோதனையின் போது, தாய்ப்பால் குழந்தையின் மூச்சுக்குழாய்க்குள் சென்றமையால் மூச்சு திணறல் ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டது.

## விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி

*நாகர்கோவில் விஷேட நிருபர்)*

வேகக்கட்டுப்பாட்டினை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் கோவில்,முள்ளியானைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மகேந்திரன் மதுசன் (வயது 37) என்பவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (13) வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் கோவில் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் தலையில் படுகாயம் அடைந்த அவர் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று புதன்கிழமை(14) காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்விபத்து தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## மனித உரிமைகளை உறுதிப்படுத்துமாறு வவுனியாவில் போராட்டம்

*ஓமந்தை விஷேட நிருபர்*

மனித உரிமை செயற்பாட்டாளர்களை சுதந்திரமாக செயற்பட விடுங்கள் எனும் கோரிக்கையை முன்வைத்து வவுனியாவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில், நீதிக்கான மக்கள் அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டமானது, நேற்று வவுனியா குருமன்காட்டு சந்தியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மனித உரிமை செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதை நிறுத்து, கருத்துச்சுதந்திரம் எங்கள் உரிமை, நடமாடும் சுதந்திரம் எங்கள் உரிமை போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அமைதியாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் போராட்டத்தில் மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## அமரத்துவமடைந்த ஆயர் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையின் உருவச்சிலை திறந்துவைப்பு

*தலைமன்னார் விஷேட நிருபர்*

இலங்கையின் முதலாவது தமிழ்க் கத்தோலிக்க ஆயராகவும் யாழ். ஆயராகவும் இருந்த எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையின் மறைவின் 50ஆவது ஆண்டு நிறைவில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வாக அவரின் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்டத்தின் முதலாவது சுதேச ஆயராக பணியாற்றி மறைந்த ஆயர் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையின் உருவச்சிலை திறப்பு விழா நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை (12.09.2022) காலை யாழ். புனித மரியன்னை பேராலய வளாகத்தில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆயரின் உருவச் சிலையினை திரைநீக்கம் செய்து வைத்தார்.

யாழ். மறைமாவட்டத்தின் மூத்தகுரு அருட்திரு இம்மானுவேல் அடிகளார் ஆயர் விபரங்கள் அடங்கிய நினைவுக்கல்லையும் திறந்து வைத்தார்.



## பூட்டியிருந்த வீட்டை திறந்து திருட்டு

வல்வெட்டித்துறையில் பூட்டியிருந்த வீட்டின் கதவை திறந்து சுமார் 16 பவுன் தங்கநகைகள் திருடப்பட்டுள்ளன.

